Registered No. M-4483

Madras War Review { TAMIL 5-11-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV 1943-ம் ஞு நவம்பர் மீ 5உ, வெள்ளிக்கிழமை இதழ் 10

பூரண வெற்றிக்குச் சமம்

கர்னல் ப்ராங்க் நாக்ஸ்

மாஸ்கோ மகா நாட்டின் முடிவை, ஆசியாவிலோ அல்லது, ஐரோப்பிய யுத்தத்திலோ, பூரண வெற்றி யடைந்ததற்குச் சமமாகச் சொல்லலாம். மாஸ்கோ மகா நாட்டின் பலனுக, நேச நாடுகளுக்குள் நெருங் கிய ஒற்றுமை பெருகும்; எதிரிகளான ஜெர்மானியர் களையும் ஜப்பானியரையும், நெடு நாட்களாக நிகழ்ந்த எல்லாவற்றையும் விட, அதிகமாக வேரறுக்கும்

கர்னல் ப்ராங்க் நாக்ஸ், அமெரிக்கக் கப்பற் படை மந்திரி மாஸ்கோ மகாநாட்டைக் குறித்து கூறியது

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : கர்னல் ப்ராங் நாக்ஸ் ..	1	"இந்த யுத்தத்தை ஆரம்பித்தது ஜப்பானியர்கள்"	6
பூரண வெற்றிக்குச் சமம்	1	யுத்த காலத்தில் அரசாங்க உதவி	7
முரசொலி	2	ஜெர்மனியில் பெரும் பீதி	8
விளம்பரம் : "விடுதலை"	2	மீண்டும் ஏமாந்த சோணகிரியா ?	9
தலையங்கம் : மாஸ்கோ மகாநாடு	3	மாஸ்கோ மகா நாடு	10
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4	யுத்த நாட் குறிப்புகள்	11
மாகாண ஒலி பெருக்கி இலாக்கா நிர்வாக அறிக்கை	5	பரிசுகள்	12

முரசொலி

"செக்கோஸ்லேவியாவை மீட்டு, அதன் தலைவராக விருந்த தாமஸ் மசாரிக் தோற்றுவித்த அரசாங்கம், மீண்டும் அமையக் கூடிய காலம், விரைவில் வரப் போகிறது. அப்போது, ஐரோப்பிய நாடுகளில் தனக் குரிய நிலைமையை செக்கோஸ்லேவியா அடையும். நேச நாடுகளின் பொது லட்சியத்திற்காக, மகா தியாகங்களைச் செய்வதற்கு எத்தனையோ ஆண்களும் பெண்களும் செக்கோஸ்லேவியாவில் இருந்தார்கள் என்று நமக்குத் தெரியும். உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் எத்தனையோ செக்கோஸ்லேவியர்கள், இரக்கமற்ற எதிரிகளோடு, போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாக உறுதியோடும் நம்பிக்கையோடு மிருக்கிறார்கள். விரைவில் அதற்குப் பலன் கிடைக்கும்.

—மிஸ்டர் ஈடன், டாக்டர் பினேஷுக்கு, செக் குடியரசின் 25-வது ஆண்டு விழாவின்போது அனுப்பிய செய்தி.

* * * * * *

"விடுதலையும் நீதியும் பாதுகாக்கப்பட வேண்டும்; சமாதானம் நிலை நாட்டப்பட வேண்டும். இந்த உணர்ச்சி சீன மக்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இருப்பது போலவே, மற்ற நேச நாட்டு மக்களுக்கும் இருக்கிறது. இவற்றின் பொருட்டே இவர்கள் எல்லோரும் அமெரிக்கர்களோடும் சீனர்களோடும் சேர்ந்திருக்கிறார்கள். தங்கள் அறிவு மிக்க, தலை சிறந்த தலைமையில், சீன மக்களுக்காக இந்த இலட்சியங்களை நீங்கள் அடைய முடியு மென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

—மிஸ்டர் ரூஸ்வெல்ட், ஷியாங்-கெய்-ஷேக் பிறந்த விழா வன்று, அவருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி.

* * * * * *

"முக்கியமான நேச நாடுகளின் கூட்டுப் பிரகடனத்தை சீனு மிகுந்த உற்சாகத் தோடு வரவேற்கிறது. யுத்தத்தை நடத்துவதில் எல்லோரும் பங்கு கொள்ள வேண்டு மென்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றியும், யுத்தத்திற்குப் பிறகு, எல்லா நாடுகளும் ஒருமிக்க பாதுகாப்போடு வாழுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடிக்க வேண்டு மென்றும் உறுதி கொண்டிருப்பதாக அதில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானங்களைச் செய்த பெருமை, மிஸ்டர் ஈடன், மிஸ்டர் ஹல், தோழர் மொலொடோப் ஆகியவருக்கு உரித்தாகும். இந்தத் தற்கால எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் ஏற்ற கருவிகளாக உதவக் கூடும்.

—டாக்டர் சூங், சீன அந்நிய நாட்டு மந்திரி, மாஸ்கோ மகாநாட்டைப்பற்றி கூறிய கருத்து.

* * * * * *

சீன மக்களுக்கும் இந்திய மக்களுக்கும், ஆழ்ந்ததும் நிரந்தரமானதுமான கலைத் தொடர்புகள் உண்டு.

—ஸ்ரீமதி ஷியாங்-கெய்-ஷேக், சீனுவில் இந்தியப் பஞ்ச நிவாரணக் கமிட்டி தலைமையை ஏற்றுக் கொண்ட போது கூறியது.

தமிழ்ப் பெருமக்களே ! **"விடுதலை"** உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றால், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.

ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப் பத்திரிகை அப்படியே தருகிறது.

குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.

இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.

நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1943-௵ நவம்பர்மீ 5உ, வெள்ளிக்கிழமை | இதழ் 10

மாஸ்கோ மகா நாடு

சில மாதங்களுக்கு முன்னர், பிரதம மந்திரி சர்ச்சிலும் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டும் க்யூபெக்கில் கூடி யுத்த ஏற்பாடுகளைப் பற்றி பேசினார்கள். அப்பொழுது, ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் ஏன் அதில் கலந்து கொள்ளவில்லை என்ற பிரச்சனை வெகு மும்முரமாகக் கிளம்பியது. அமெரிக்க-ஆங்கிலோ ஆலோசனை மட்டும் போதாது என்று பல தேசங்களும் கருதின. யுத்தத்தைத் தீவிரமாக நடத்தி வெற்றியை விரைவில் அடைய வேண்டுமானால், ரஷ்யத் தலைவர் மார்ஷல் ஸ்டாலின், சர்ச்சில்; ரூஸ்வெல்ட் மூவரும் கூடிய சீக்கிரம் சந்தித்துக் கலந்து பேசவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.

இதன் அவசியத்தை பிரதம மந்திரி சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்டும் நன்குணர்ந்தே இருந்தனர். வெகு சீக்கிரம் அவ்வித சந்திப்புக்கு ஏற்பாடு நடை பெறும் என்று இருவரும் அறிவித்தனர். அதன்படி மேற்படி முப்பெருந் தலைவர்களும் நேருக்கு நேர் சந்தித்து விஷயங்களை ஆராய்வதற்கு முன்னதாக, மூன்று வல்லரசுகளின் அன்னிய நாட்டு மந்திரிகளும், அவர்களது பிரதம ராணுவ வல்லுநர்களும் மாஸ்கோ நகரில் சென்ற அக்டோபர்மீ 19உ முதல் 30உ முடிய கூடிப் பேசினர். மொத்தம் பன்னிரண்டு முறை கூட்டம் நடந்தது. பிரதம பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அன்னியநாட்டு மந்திரி அந்தோனி ஈடன், அமெரிக்காவின் அரசாங்க காரியதரிசி கார்டெல் ஹல், சோவியத் ரஷ்யாவின் அந்நிய விவகார மந்திரி தோழர் எம். மால்டோப்.

வல்லரசுப் பிரதிநிதிகள் மகா நாட்டில் அந்தந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட விஷயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டன. சில விஷயங்கள் பற்றி ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் முடிவுகள் செய்யப்பட்டன. மற்றப் பிரச்சினைகளை மேற்கொண்டு அரசியல் பேச்சுகளைத் தொடர்ந்து நடத்துவதின் மூலம் தீர்த்துக் கொள்வதென ஒப்புக் கொள்ளப்பட்டது.

பொதுவாக யுத்தத்தை எவ்வளவு சீக்கிரம் வெற்றிகரமாய் முடிக்கலாம் என்பதே, முக்கியமாக ஆலோசிக்கப்பட்ட விஷயம். அது சம்பந்தப்பட்ட மட்டில், மூன்று தேசங்களிடையேயும் பூரண ஒற்றுமை நிலவியது. யுத்தத்தை அச்சு நாடுகளுடன் தீவிரமாக ஒற்றுமையுடன் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. நிபந்தனையின்றி சரணாகதியடையும் வரை, அந்தந்த அச்சு நாடுகளுடன் கடுமையாக அந்தந்தத் தேசம் போராட வேண்டும் என்று கொள்ளப்பட்டது. ரஷ்யா ஜப்பானுடன் போர் தொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படாதது இங்கு குறிப்பிட வேண்டிய விஷயம்.

மேலும் சிக்கலான பிரச்சினைகளையும், யுத்தம் முடிந்தவுடன் சமாதான நிபந்தனைகளையும் நிர்ணயிக்கவும், மேற்கொண்டு யுத்தம் ஏற்படாதபடி சமாதானத்தை நிரந்தரமாக நிலை நிறுத்தும் வேலையிலும், இதர புணருத்தாரணத் திட்டங்களிலும் மூன்று வல்லரசுகளுடன் கூட்டுறவுடன் வேலை செய்ய வேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டது. தற்சமயம் அச்சு நாடுகளால் ஆக்ரமிக்கப் பட்டுள்ள தேசங்களை விடுதலை செய்து, அவற்றின் எதிர்கால அரசியல் வாழ்வை நிர்ணயிப்பதற்காகவும், ஐரோப்பிய ஆலோசனை சபையொன்று நிர்மாணிக்கப்படும். அதன் தலைமை ஸ்தானம் லண்டன் நகரமாக இருக்கும். இச்சபையின் விவாதங்களில், இதர ஐக்கிய தேசங்களும், நியாயமான பங்கு பிரச்சினைகளின் முக்யத்துவத்துக்குத் தக்கபடி, பங்கெடுத்துக்கொள்ளும்.

இத்தாலியின் எதிர்கால வாழ்வைப் பற்றியும் மாஸ்கோ மகாநாடு திட்டமான அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளது. பாஸிஸத்தை அடியோடு ஒழித்து, யதேச்சாதிகாரத்தைப் போக்கி, ஜனநாயக அரசாங்கத்தை ஸ்தாபிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. பாஸிஸக் கொடுமைக்காரர்களையும் தண்டனைக்குட்படுத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தவிர, ஜெர்மனியிடம் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் ஆஸ்திரியாவின் சுதந்திரத்தையும் நிலை நாட்ட வேண்டிய ஏற்பாடுகளை உடனே கைக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. முதலாவது மஹா யுத்தத்துக்குக் காரணம் ஆஸ்ட்ரியா ஹங்கேரிய சம்பவங்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இந்த இரண்டாவது உலக யுத்தத்துக்கும் ஆரம்பம், ஜெர்மனி, ஆஸ்திரியா மீது ஆக்ரமித்தது தான் என்று ஒருவாறு கூறலாம். மூன்றாவது உலக யுத்தம் மூளாதபடி தடுக்க, ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை நிலை நாட்டி, அந்நாட்டின் சிக்கல்களை நீக்குவதன் மூலம் போர் நெருப்பு மூளாமல் செய்ய, மாஸ்கோ மகாநாடு ஏற்பாடு செய்ய முன் வந்தது, மிகவும் சிறந்ததொரு செய்கையாகும்.

மேலும் ஜெர்மானியரின் கொடுமைகளின் முழு பலத்தையும் அனுபவித்த ரஷ்யாவின் வற்புறுத்தலின் பேரில், அந்தந்த தேசங்களில் கொடுஞ் செயல்கள் புரிந்து மக்களைக் கஷ்டப்படுத்திய ஜெர்மானிய முக்கியஸ்தர்களை, அவர்கள் அட்டகாசம் செய்த தேசங்களுக்கு அனுப்பி, அத்தேச சட்டங்களின்படி விசாரணை செய்து, தக்க தண்டனை யளிப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. சென்ற மகா யுத்தத்துக்கும் கொடுமைக்காரர்கள் அனேகர் வெகு எளிதாக சுகமான வாழ்க்கை நடத்த விடப்பட்டு விட்டனர். தாங்கள் பண்ணிய அக்கிரமங்களுக்கு, அவர்களுக்கு, யாதொரு

தண்டனையும் அளிக்கப்படவில்லை. அந்த மாதிரி கொடுந் தன்மை கொண்டவர்களை, இந்த யுத்தத்துக்குப் பின், தப்பவிடப் போவதில்லை என்று முடிவு கட்டியது. யுத்த வெறிகொண்டு பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களை பலிவாங்கிய பேராசைப் பேய்கள் மனதில் ஒருவித பீதியைக் கட்டாயம் உண்டு பண்ணும். தாங்கள் விடுத்த அம்புகள் ஒரு சமயம் தங்கள் மார்பிலேயே வெகு வேகமாக வந்து தைக்கும் என்ற அச்சம் தோன்றும். இந்த உறுதியை வெளியிட்ட மாஸ்கோ மகாநாடு ஒரு புதுப்பாதையை உண்டாக்கி யிருக்கிறது என்று சொல்வது மிகையாகாது.

மூன்று. வல்லரசு மகாநாடு வெற்றிகரமாக முடிந்தது பற்றி உலகெங்கும் மகிழ்ச்சி காணப்படுகிறது. பல தேச அரசியல் வாதிகளும் மகாநாடு சாதித்துள்ள காரியங்களைப் புகழ்ந்து கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். இம் மகாநாடு முறிந்து விடுமென்று, ஜெர்மனி பகற் கனவு கண்டு கொண்டிருந்தது. அது இப்போது பெரும் ஏமாற்றமடைந்து விட்டது. இனி, போர் தீவிரமாக நடை பெறும். ஜெர்மனியின் முதுகெலும்பு முறிபடும்படி அடிமேல் அடி விழும். நாஸி ஆதிக்கம் நாசமாகும் நன்னாளை முன்னுடிக் கொண்டுவர, இம் மகாநாடு உதவி செய்து விட்டது. இதை யொட்டி இம் மகாநாட்டின் ஆதி நோக்கமான சர்ச்சில்-ரூஸ்வெல்ட்-ஸ்டாலின் சந்திப்பும் விரைவில் ஏற்படும் என்றும் எதிர் பார்க்கலாம். மகா நாட்டைப் பற்றி, கர்னல் நாக்ஸ் "இம்மகா நாட்டின் முடிவுகள் நேச தேசங்களின் வெற்றிக்குச் சமமானது" என்று கூறியிருப்பது மகா நாட்டின் மகத்தான வெற்றியை விளக்குகிறது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

கிரீஸில் பஞ்சம் : சென்னையில் நிவாரணக் கமிட்டி.

கெய்ரோவிலுள்ள கிரேக்க ஸ்தானீகர் ஆலயத்திலிருந்து ஹெலென்னிஸ் மன்னரான மாட்சிமை தங்கிய 2-வது ஜார்ஜ் மன்னர் இந்திய மக்களுக்கு சென்ற வாரம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதில், மூன்று வருஷங்களுக்கு முன்பு, எந்த விதக் காரணமுமின்றி இத்தாலி கோழைத் தனமாக கிரீஸை தாக்கியது பற்றி குறிப்பிடுகிறார். அது பற்றி அவர் கூறியதாவது :—

"சிறிய கிரேக்கப் படை, எதிரிகளோடு கடுமையாக 6 மாதங்கள் போராடி அவர்களை அல்பேனியா மலைப் பக்கங்களுக்கு விரட்டியது உலகினருக்கு ஞாபகமிருக்கும். மகத்தான ஜெர்மன் படை பலத்தைக் கொண்டு தான் வீர கிரேக்கர்களை எதிரிகள் வென்றார்கள்."

இன்று கிரேக்க நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மக்கள் பட்டினியால் மெலிந்து வாடுகிறார்கள். இது தாளாமல் தான், கிரேக்க மன்னர், இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அவர் அதில் மேலும் குறிப்பிடுவதாவது :—

"எதிரிகளோடு வீரத்தோடு போராடிய, இன்னும் போராடிக் கொண்டிருக்கும், கிரேக்கர்களின் தாய்மார்களுக்காகவும் மனைவி மக்களுக்காகவும், உணவு உடை, மருந்துகள் முதலியவை மிகவும் அவசரமாகத் தேவையாயிருக்கிறபடியால், அவற்றை உதவுமாறு இந்தியர்களாகிய உங்களை நான் வேண்டிக் கொள்ளுகிறேன்."

இந்த வேண்டுகோளுக் கிணங்க, சென்னையில், கிரேக்க கஷ்ட நிவாரணக் கமிட்டி யொன்று ஏற்பட்டிருக்கிறது. இதன் தலைவர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் (கவர்னர்) அவர்கள். இந்தக் கமிட்டியார் கிரேக்கப் பொது ஜனங்களுக்கும், குறிப்பாகக் குழந்தைகளுக்கும் உதவி செய்யும் பொருட்டு பண வசூல் செய்கிறார்கள். இதற்கு அனுப்பப்படும் எல்லா நன்கொடைகளும், சென்னை, எஸ்ப்லனேட், "டேர் ஹௌஸ்", கிரேக்கக் கஷ்ட நிவாரண வேண்டுகோள் கௌரவக் காரியதரிசிக்காவது, சென்னை கவர்னர் யுத்த நிதி (கிரேக்கக் கஷ்ட நிவாரணம்) கௌரவப் பொருளாளருக்காவது அனுப்பலாம். இப்படி வசூலிக்கப்படும் தொகைகளைச் சேர்த்து செஞ்சிலுவைச் சங்கத்தார் மூலமாக, மருந்துகளும் உடுப்புக்களும், கிரேக்க மன்னருக்கு அனுப்பப்படும்.

கிரேக்க தேசத்தைக் கைப்பற்றியவுடனே ஜெர்மானியரும் மாறிமாறி கிரேக்கர்களின் உணவுப் பொருட்களையும், விதை தானியங்களையும், கால் நடைகளையும் சூறையாடிய தன் பயனாக, பஞ்சமும், நோயும் தோன்றி, 62½ லட்சம் கிரேக்க மக்களில் 5 லக்ஷம் பேர்கள் மடிந்துபோனார்கள். நாளடைவில் கிரேக்க சாதியாரே அழிந்துவிடுவார்களோவென்று அஞ்ச வேண்டி யிருக்கிறது.

இத்தாலியக் கட்டளையும் கிரேக்கர் மறுப்பும்.

1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 27-ம் தேதி இத்தாலிய மந்திரியான க்ராசி ஒரு விருந்து நடத்தினார். அந்த விருந்திற்கு கிரேக்கப் பிரமுகர்களும் இத்தாலியப் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். கிரேக்கக் கொடிகளும் இத்தாலியக் கொடிகளும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு அந்த மண்டபத்தை அலங்கரித்தன. அப்போது இத்தாலிக்கும் கிரேக்க நாட்டிற்கு முள்ள நட்பை வலியுறுத்தி க்ராசி யுள்பட, பலர் பேசினார்கள்.

மறு நாள் காலை 3 மணிக்கு கிரேக்க பிரதம மந்திரியான மெடக்ஸாஸ் டெலிபோன் மணியடித்தது. அவர் படுக்கையை விட்டெழுந்து போய்ப் பேசினார். "நான் பிரஞ்சு மந்திரி; உங்களோடு உடனே பேசவேண்டியிருக்கிறது," என்று அவரிடம் ஒருவர் கூறினார். இதை உண்மையென்று நம்பி, கிரேக்கப் பிரதம மந்திரி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். பிரஞ்சு மந்திரி அங்கில்லை ; ஆனால் கிராசி தான் அங்கிருந்தார். "இன்னும் 3 மணி நேரத்திற்குள்ளாக, கிரீசில் உள்ள சில கேந்திர ஸ்தானங்களில் இத்தாலியப் படைகள் அமைத்து கொள்ள அனுமதிக்க வேண்டு மென்று க்ராசி கூறினார். இதற்கு ஒத்துக் கொள்ள முடியாதென்று கண்டிப்பாக முதல் மந்திரி பதில் கூறிவிட்டார். காலை 6 மணிக் கெல்லாம் இத்தாலியப் படைகள் கிரீசிக்குள் நுழைந்து விட்டன.

கிரேக்கர்களின் அரசியல் கொள்கைகள் பெரிதும் வேறுபட்டிருந்தபோதிலும், கிரேக்க மக்கள் அனைவரும் திரண்டு வந்து போராடியது, பெரிதும் போற்றத் தக்கது. கிரேக்க அரசாங்க சபையிலுள்ள கட்சிகளின் போக்கில் கடுமையான வேற்றுமைகள் 1936-ம் வருஷத்தில் காணப்பட்டதால் தான், பூரண ஆதிக்கத்தோடு ஆட்சியை நடத்தும்படி ஜெனரல் மெடக்ஸாஸை பிரதம மந்திரியாக நியமித்தார்கள். யுத்தத்தில் ஈடுபடாமல் நடுநிலைமை நாடாகவே கிரீஸ் இருக்க வேண்டு மென்று அவர் அரும்பாடுபட்டார். ஆனால், இத்தாலியப் படைகள் கிரீசை யுத்தத்தில் இழுத்து விட்டன. அதற்கு பலவருஷங்களுக்கு முன்னதாகவே, அவர் நிலைமையை உணர்ந்து இராணுவத்தில் பெரும் சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார். இதற்கும் முன்னதாக ஜெனரல் பங்கோலாஸ் ஏற்படுத்தியிருந்த சீர்திருத்தங்கள், அவர் முயற்சிக்குப் பெரிதும் உதவின.

இத்தாலி, கிரீசைத் தாக்கினது.

கிரீசை இத்தாலி தாக்கும் முன்னதாக இத்தாலியப் பத்திரிகைகள், அல்பேனியாவிலுள்ள கலகக்காரர்களுக்கு கிரேக்கர்கள் ஆதரவளித்து வருவதாக வீணாகக் குறைகூறிக் கொண்டிருந்தன. ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி ஹெல்லி என்னும் கிரேக்கக் கப்பலை இத்தாலி வேண்டுமென்றே "டார்பிடோ" வெடி குண்டால் தாக்கி நாசம் செய்தது. யுத்த ஆரம்பத்திற்கு இது தான் பெயரளவில் காரணமாக விருந்த தென்று சொல்லலாம்.

தம்மைத் தாக்கிய இத்தாலியர்களை வீர கிரேக்கர்கள் கடுமையாக எதிர்த்துப் போராடினார்கள்.

அச்சு நாடு அடைந்த முதல் தோல்வி இங்கே தான்.

அல்பேனியா பக்கம் இத்தாலியர் விரட்டப்பட்டனர். கிரீஸைத் தாக்கி ஒருமாதத்திற்குள் அவர்கள் இப்படி விரட்டப் பட்டாலும், ஜெர்மன் படைகளின் உதவி 1941-ம் வருஷம் ஜனவரி மாதம் இத்தாலிப் படைகளுக்குக் கிடைத்தது. பல்கேரிய எல்லைப்புரங்களில் ஜெர்மன் படைகள் தங்கிக் கொண்டன. இதற்கு பல்கேரியர்களும் உடந்தையாயிருந்தார்கள். மார்ச்சு மாதம் 1-ம் தேதி டானியூப்

நதியைக் கடந்து ஜெர்மன் படைகள் முன்னேற ஆரம்பித்தன.

கிரீஸ் நிலைமை அப்படியல்ல. அதன் சேனைகளெல்லாம், அல்பேனியாவிலுள்ள இத்தாலியர்கள் முன்னேறாதபடி தடுத்துக் கொண்டு வடமேற்குத் திசையிலிருந்தன. தன் வலது பக்க எல்லைகளைக் காக்கப் போதுமான பலம் கிரீசுக்கு அப்போது கிடையாது. ஆகவே தான் 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ம் தேதி, உதவி கோரி, பிரிட்டனுக்கு கிரீஸ் ஒரு வேண்டுகோள் விடுத்தது.

* * * *

ஹிட்லருக்கு பஹிரங்கக் கடிதம்.

நான்கு நாட்களுக்குப் பிறகு, கிரேக்க பத்திரிகா நிருபரான ஜார்ஜ் விலாச்சாஸ் என்பவர் தன் 'கதரிமெரின்ட்' என்னும் பத்திரிகையில் இத்தாலியர்களுக்கு உதவியாக ஜெர்மானியர்கள் வருவது பற்றி கீழ்க் கண்டவாறு எழுதினார் :—

''சில லட்சம் பேர்களைக் கொண்ட எங்கள் நாட்டை 4½ கோடி மக்களைக் கொண்ட இத்தாலி தாக்கி, நிலைமையைச் சமாளிக்க முடியாமல், 8½ கோடி மக்களை (ஜெர்மனியை) உதவி கோருவதைக் கண்டு உலகமே எள்ளி நகையாடும்.''

கிரீஸ் பிரிட்டிஷ் உதவியைக் கோரியது பற்றி அவர் எழுதியதாவது :—

''பிரிட்டிஷாரை கிரீசுக்கு வரும்படி செய்தது நாங்களல்ல; ஆனால் இத்தாலியர்கள் தான். இத்தாலியர்கள் கொண்டு வந்தவர்களை, நாம் போகச் சொல்ல வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். அப்படியே ஆகட்டும். போகச் சொல்லுவோம். யாரைப் போகச் சொல்லுவது? உயிரோடிருப்பவர்களையா? சரி. இறந்து புதைக்கப்பட்டவர்களை எப்படிப் போகச் சொல்லுவது? மலைகளில் எத்தனைப் பேர்கள் மாண்டு போயினர். அட்டிக்காவில் பலர் காயங்களால் மடிந்தனர். தம் நாட்டிலேயே தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும் போது, கிரீசுக்கு வந்து போராடி உயிர் விட்டார்கள். இது கிரேக்க நாட்டில் எவராலும் செய்ய முடியாததோர் காரியம். உயிரோடிருப்பவர்களையாவது, இறந்து போனவர்களை யாவது நாம் விரட்டி விட முடியாது. நாம் யாரையும் வெளி யேற்ற மாட்டோம். இங்கேயே இருப்போம். யுத்த மேகங்கள் கலைந்து சமாதான சூரியன் உதயமாகிற வரையும் அவர்கள் பக்கலிலேயே நிற்போம்.''

அந்தக் கடிதத்தின் கடைசிப் பகுதியில் இலக்கியச் சுவை ததும்புகிறது. அது வருமாறு :—

''நமது படைகளை வரவேற்பதற்கு, குதிரைகளையும் பீரங்கிகளையும் அனுப்புவதற்குப் பதிலாக, காயப்பட்டு ரத்தக் களறியா யிருக்கும் 20 ஆயிரம் பேர்களை அனுப்பியிருந்தால், அவர்கள் மனம் எப்படி யிருந்திருக்கும். முடியாது. ஒரு போதும் முடியாது. கிரேக்கப் படை பெரிதாயிருந்தாலும், சிறிதாயிருந்தாலும் எபிரசில் வீரத்தோடு போராடியதைப் போலவே, திரேசிலும் போராடும்.''

* * * * *

பிரிட்டன் இயன்ற உதவியைக் கிரீசுக்கு அனுப்பியது. என்றாலும் பயனில்லை. இத்தாலிக்கும் கிரீசுக்கும் போராட்டம் ஆரம்பமான போது, நடு நிலைமை வகிப்பதாக வலியுறுத்தி வாக்குக் கொடுத்த யுகோஸ்லாவ் அரசாங்கம், மார்ச்சு மாதம் 25-ம் தேதி ஜெர்மனியோடு, ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதனாலுங் கூட, யுகோஸ்லாவியா தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. சில நாட்களில் ஜெர்மன் படைகள் அதற்குள் புகுந்தன. ஏப்ரல் மாதம் 10-ம் தேதி செலனிக்காவைக் கைப்பற்றின. பிறகு தான், ஜெர்மன் படைகள் பிரிட்டிஷ் படைகளைச் சந்தித்தன. அப்போது அல்பேனியாவிலுள்ள கிரேக்கப் படைகள் துண்டிக்கப்பட்டு விட்டன. மேலும் ஜெர்மன் படைகள் வந்து கொண்டிருந்தன. ஆகவே, பிரிட்டிஷ் படைகள் தெர்மோபைலே என்னு மிடத்திற்குப் பின் வாங்க நேர்ந்தது. அப்போது தான் கிரீசின் தென் பாகத்தையாவது காப்பாற்றக் கூடும். இதுவும் கைகூடவில்லை. எனவே கிரீசை விட்டே பிரிட்டிஷ் படைகள் வெளியேற வேண்டியதாயிற்று. 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 28-ம் தேதியே பெரும்பான்மையான பிரிட்டிஷ் படைகள் வெளியேறி விட்டன. மே மாதம் 31-ம் தேதி பிரிட்டிஷ் படைகள் கிரீசுக்குச் சொந்தமா யிருந்த க்ரீட் தீவை விட்டும் காலி செய்து விட்டன.

ஏதென்ஸ் நகரத்தில் தான் பண்டைக் காலத்தில், ஜனநாயகமும் சுயேச்சையும் மக்கள் வாழ்க்கைக்கு மிகவும் ஏற்றவை என்று கண்டு பிடிக்கப் பட்டது. அப்படிப்பட்ட நகரத்தைச் சேர்ந்த அக்ராபாலிஸ் மீது, அடிமைத் தனத்தின் சின்னமாகிய 'சுவஸ்திகா' கொடி ஏப்ரல் 27-ம் தேதி பறக்க விடப்பட்டது.

யுத்தத்திற்கு கிரேக்கர் உதவி ஈடு செய்ய முடியாதது.

கிரேக்கர்கள் போராடியதனால், பலன் எதுவும் இல்லை யென்று சிலர் நினைக்கலாம். அது தவறு. அவர்கள் அவ்வளவு கடுமையாக ஜெர்மானியர்களோடு போராடாதிருந்தால், இன்று கெய்ரோவிலும் மாஸ்கோவிலும் ஜெர்மானியர்கள் இருக்கக் கூடுமென்று டேவிட் வாக்கர் கூறுகிறார். கிரேக்கர்கள், மற்ற நாடுகள் ஆயத்தஞ் செய்து கொள்ளுவதற்கு ஆறு மாத காலம், அவகாசம் அளித்தனர். கிரேக்கர்கள் எதிர்த்துப் போராடியதனால், நேச நாடுகளுக்கு மிகவும் வசதியா யிருந்த தென்று சொல்லுவது மிகையாகாது. இத்தாலிய விமானப் படையை நொறுக்கவும், டாரொன்டோவிலும் மண்டபானிலுமுள்ள இத்தாலியக் கப்பற்படைகளை தகர்த் தெறியவும், பிரிட்டனுக்கு கிரேக்க தளங்கள் உதவின. அன்றியும், கிரேக்கப் படைகள் போராடிக் கொண்டிருந்ததனால் தான், மத்திய கிழக்குப் பகுதிகளுக்குப் படைகளையும் தளவாடங்களையும் பிரிட்டன் அனுப்ப வசதியா யிருந்தது. பாஸிஸ்ட்களுக்கு கிரீஸ் அடங்கிப் போயிருந்தால், ஈராக்கில் கலவரம் விளைக்க முயற்சித்துக் கொண்டிருந்த ரஷீதலிக்கு ஜெர்மன் படைகள் உதவியாக அங்கே போயிருக்கக் கூடும். சிரியாவிற்குள்ளும் ஈராக்குக்குள்ளும் ஜெர்மன் படைகள் போய், ஆசியா மைனர் வழியாகத் தம் படைகள் போக்குவரத்திற்கு வழிசெய்து கொண்டிருக்கும்.

நிற்க, கிரேக்கர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்துப் போராடாதிருந்திருந்தால், இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே ஜெர்மானியர்கள் ரஷ்யா மீது பாய்ந்திருப்பார்கள். இந்த இரண்டு மாதங்களும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள ரஷ்யர்களுக்கு அவகாசம் கிடைத்தது. இந்த இரண்டு மாத கால சவகாசம் கிடைக்காம லிருந்திருந்தால் யுத்தத்தின் போக்கே மாறிப் போயிருக்கக் கூடும். இவ்வாறாக யதேச்சையை நாடும் நாடுகளெல்லாம், கிரீசுக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றன. ஆகவே, கிரேக்க மன்னர் விடுத்துள்ள வேண்டுகோளுக் கிணங்கி, நாம் கொடுக்கும் உதவிகள் தகுந்தபடி ஈடு செய்யும் என்று சொல்ல முடியாது.

மாகாண ஒலிபெருக்கி இலாக்கா நிர்வாக அறிக்கை

(1942-ம் வருஷம் செப்டம்பர் மீ முதல் 1943-ம் வருஷம் ஆகஸ்டு மீ முடிய)

மாகாண ஒலிபெருக்கி இலாக்கா தோன்றி 5 வருஷங்கள் ஆகி விட்டன. அறிக்கை வருஷத்தில் கிராமப் புரங்களில் 95 'ரேடியோ செட்டு'களும் முனிசிபல் பட்டணப் புரங்களில் 12 'ரேடியோ செட்டு'களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. 1943-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 31-ம் தேதி 467 கிராமப் புரங்களிலும், 108 முனிசிபல் பட்டணப் புரங்களிலும் இந்த இலாக்கா 'ரேடியோ செட்டுகளை' யமைத்திருக்கிறது. இந்த இலாக்காவின் உதவி யில்லாமலேயே சில முனிசிபாலிடிகளும், பஞ்சாயத்து போர்டுகளும் தம் சொந்த 'செட்டுகளை' யமைத்திருக்கின்றன. இம் மாகாணத்திலுள்ள 83 முனிசிபாலிடிகளில் 8 முனிசிபாலிடிகளில் மட்டுந்தான் 'ரேடியோ செட்டுகள்' கிடையாது. அங்கேயும் விரைவில் அமைத்து விடுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

கிராமங்களிலுள்ள பொது ஜனங்களுக்கு யுத்த சம்பந்தமாக நம்பிக்கையான செய்திகளை யறிவிக்க வேண்டி, மேலும் 300 'ரேடியோ செட்டுகளை' வாங்குவதற்கும் அவற்றை யுத்தம் முடியும் மட்டும் நடத்துவதற்கான செலவுகளிலும் பாதித் தொகையை அரசாங்கத்தார் அனுமதித்தார்கள். இந்த 300 'செட்டு'களும் அமைக்கப்பட்டு விட்டன. இந்த ஏற்பாட்டின்படி மேலும் 'செட்டு'கள் வேண்டு மென்று கோரி, அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் வந்தன. ஆகவே மேலும் 200 'செட்டு'கள் வாங்குவதற்கும் அனுமதித்தனர். அதாவது, மொத்தத்தில் 500 செட்டுகள் வாங்கவும் அவற்றை நடத்தவும் செலவாகுந் தொகையில் ஒரு பாதியை அரசாங்கத்தாரே ஒப்புக் கொண்டார்கள். இந்த ஏற்பாட்டில் மேற்கொண்டு 26 'செட்டு'கள் தான் அமைக்க முடிந்தது. 'செட்டு'கள் கிடைக்காததனால் மேலும் அமைக்க முடிய வில்லை. இம் மாகாணத்திலுள்ளவர்கள் உபயோகத்திற் கென்று, இந்தியா அரசாங்கத்தார் இலவசமாக 568 'ரேடியோ செட்டு'கள் அனுப்பி யிருக்கிறார்கள். அவற்றை எங்கே அமைப்பது என்பது பற்றிய ஆலோசனை நடந்து வருகிறது.

(சீனச் சிறுவர்களைக் கொண்டு ஜப்பானியர் நிலத்தை உழச் செய்யும் கொடுமை.)

"இந்த யுத்தத்தை ஆரம்பித்தது ஜப்பானியர்கள்"

1932-ல் சீனாவைத் தாக்கித் தொடங்கிய பெரும்போர்

ஜப்பானியர் பொது நோக்கம் பொருளாதாரக் கொள்கை தான்

கைப்பற்றப்பட்ட நாட்டினரை வதைக்கும் கொடுமை

சமீபத்தில் திருச்சி அகில இந்திய வானொலி நிலயத்திலிருந்து "ஒரு குடையும் எண்டிசையும்" என்னும் தொடரில் "கலாசார பலாத்காரம்" என்னும் பொருள் பற்றி, ஈரோட் அட்வகேட் இ. எம். அண்ணாமலையவர்கள் ஒலி பெருக்கிய சொற்பொழிவாவது:—

இருபத் தைந்தாண்டுகட்குப் பின்னர் முடிவடைந்த, முதல்-உலகப் போருக்குப் பின், உலகத்தின் பெரிய தலைவர்கள் எல்லாம் "இனி மேல் உலகத்தில் சண்டையே இராது, நிலையான அமைதி நிலவும்" என்று ஒருமுகமாகச் சொன்னார்கள். மக்கள் அனைவரும் அதை நம்பினர்; மகிழ்ச்சியும் கொண்டனர். அமைதியான வாழ்க்கையின் பல துறைகளிலும் உலகம் முன்னேறிக் கொண்டே வந்தது. ஆனால், இப்போது அமைதி எங்கே? மறுபடியும் ஒரு மகத்தான யுத்தத்தில் உலகம் அகப்பட்டுத் துன்புறுகிறது. உலக நாகரிகமும் மக்களின் உரிமைகளும் சிதைக்கப்படுகின்றன. போர்க்களத்தில் கணக்கற்ற மக்கள் துன்புறுகின்றனர், மாய்கின்றனர். இவ்வாறு, மறுபடியும் உலகத்தில் சண்டை தோன்றுவதற்கு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் பேராசையும் சண்டை வெறியும் காரணங்களாகும்.

முதல் நம்பர் குற்றவாளி ஆனால் முதல் முதலாக உலக அமைதியைக் குலைத்துச் சண்டையை ஆரம்பித்த, மன்னிக்க முடியாத பெருங்குற்றம் "சூரியோதய நாடு" என்று சொல்லப்படும் ஜப்பான் தேசத்தையே சாரும். ஏனென்றால் 1932-ம் ஆண்டிலேயே ஜப்பானியப் படைகள் சீனாவின் மீது, திடீரெனப் பாய்ந்து, போரையே கருதாத சீனாவை வம்புக் கழைத்தன. இவ்வாறு ஜப்பான் முன்னெச்சரிகை யின்றி சீனாவைத் தாக்கி, மஞ்சூரியாவைக் கைப்பற்றி, அதற்கு மஞ்சுகோ என்று பெயரிட்டுத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்த கதையை அறியாதவர் எவருமிலர். 1932-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜப்பானியப் படைகள் திடீரென, ஷாங்கெய் நகர் மீது பாய்ந்து 1,000 கணக்கான சீனர்களை பீரங்கிக் குண்டுகளாலும், ஆகாய விமானத்திலிருந்து எறியப்பட்ட வெடி குண்டுகளாலும், கொன்று குவித்தனர். உலக சரித்திரத்திலேயே மிகக் கோரமான படுகொலை யென்று இச்செயலை அனைவரும் கண்டித்தனர். ஆனால் இப்படை யெழுச்சிக்குத் தலைமை வகித்த ஜப்பானியக் கப்பற் படைத் தலைவன், இன்னும் இரண்டு நாட்களுக்கு மட்டும் இம்மாதிரி நிரபராதியான மக்களைக் கொல்வதென்று, ஜப்பானிய அரசாங்கம் மிகக் கருணையுடன் தீர்மானித்திருக்கிறது—என்று சொன்னான். எவ்வளவு கருணை!

மேற்சொன்னவாறு ஜப்பான் உலக சமாதானத்தைக் குலைத்து வெகு நாட்களுக்குப் பின்னர், 1935-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், முசலோனி, அபிசீனியாவின் மீது படையெடுத்தான். அதன் பின் 1939-ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், ஜெர்மனியப் படைகள் போலந்துக்குள் நுழைந்தன. இரண்டாம் உலகப் பெரும் போர் ஏற்பட்டு, இப்போது உலகத்திலுள்ள எல்லா மக்களையும், நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பாதிக்கின்றது. இதை எல்லாம் எதற்காக மறுபடியும் ஞாபகப்படுத்துகிறேன் என்றால், சென்ற மகா யுத்தத்திற்கு பிறகு, முதல் முதலாக உலக சமாதானத்தை அழித்த பெரும் பாவம் ஜப்பானையே சாரும் என்பதைக் காட்டுவதற்காகவே தான்.

கொடிய பாவத்திற்கு வழி காட்டினார்கள் ஜப்பானியர்கள்

சென்ற மகா யுத்தத்தில் மடிந்தவர்களும் காயமடைந்தவர்களும் நான்கு கோடியே அறுபது லட்சம். அந்த யுத்தத் தாலேற்பட்ட பொருட்சேதம் கணக் கெடுக்கவே முடியவில்லை. அந்த மகா யுத்தத்தை விட இப்போது நடக்கும் யுத்தம் மிகப் பெரியது. மிகக் கோரமானது. உலக முழுவதையும் வளைத்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டன் தேசம் ஒன்றிலேயே நாடோறும் சுமார் பதினைந்து கோடி ரூபாய் செலவாகிறது. அப்படியானால் இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளிலும் சேர்ந்து எவ்வளவு பணம் செலவாகும்? இந்த யுத்தம், நான்காண்டுகளாக நடக்கின்றது. இதற்குள் எத்தனை மக்கள் மடிந்துள்ளனர்! எத்தனை கோடி ரூபாய்ச் சேதம்! எத்தனை நகரங்கள் மண்ணோடு மண்ணாய் போயின! எத்தனை நாகரிகச் சின்னங்கள் அழிந்தன! இவ்வளவு பெரிய தீமையை உலகத்துக்கு இழைத்த ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளும் அந்நாடுகளின் தலைவர்களும், இப்பாவத்துக்காக இறுதியில் இறைவன் திருமுன் பதில் சொல்வதோடு, சண்டை முடிந்ததும், உலகத்தின் நியாய அரங்கத்திலும் பதில் சொல்லி ஆகவேண்டும், உயிருடன் பிடிக்கப்பட்டால். இத்தகைய கொடிய பாவத்தைக் கூசாமல் செய்ய மற்ற நாடுகளுக்கு வழிகாட்டியது, சூரியோதய நாடே.

சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வேற்றுமை

இவ்வாறான கொடுஞ் செயல்களால் உலக அமைதியைப் பாழ் படுத்தியதற்கு, ஜப்பான் கூறும் சமாதானம் தான் என்ன? ஐரோப்பாவில் புதியதோர் அமைப்பை ஏற்படுத்துவதற்காகச் சண்டை செய்வதாக ஹிட்லர் கூறுகிறார். அபிசீனியாவின் மீது படையெடுத்த போது, நாகரிகத்தில் மிகவும் பிற்போக்கான இதியோபிய மக்களுக்கு, நாகரிகத்தின் பயனை அளிப்பதற்காகவே சண்டை செய்வதாக, முசோலினி கூறினான். நிரபராதியான மக்களை விஷப் புகையால் கொன்றும், அவர்கள் குடிக்கும் தண்ணீரில் நஞ்சைக் கலந்தும் அபிசீனிய மக்களுக்கு, முசோலினி நாகரிகம் கற்பித்தான். அதுவே, மிகவும் பிற்போக்கான சீனர்களுக்கு ஜப்பானியருடைய உயர்ந்த நாகரிகத்தையும் சிறந்த கலையையும் கற்பித்து அவர்களையும் மற்றைய கீழ் நாட்டினரையும், மேற்கித்தியருடைய ஆதிக்கத்தினின்றும் விடுவித்து, அவர்களை உரிமையோடு கூடிய உயர்வாழ்வு வாழ வைப்பதற்காகவே, ஜப்பானியர் போரிடுவதாகக் கூறுகின்றனர். இக்கூற்று உண்மையா யிருக்க முடியுமா? தங்களுக்குச் சௌகரியமாகத் தோன்றும்போது, தங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய எல்லா உடன்படிக்கைகளையும் நிராகரிக்க, சிறிதும் தயங்காத ஜப்பானியத் தலைவர்கள், தங்கள் சௌகரியத்திற்காகத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரும் நாடுகளை எவ்வாறு நடத்துவார்கள்? நியாயத்தையும், அநியாயத்தையும் எண்ணிப் பார்ப்பார்களா? பிறருடைய உரிமைகளையும், தங்களுடைய கடமைகளையும் பற்றிச் சிந்திப்பார்களா? ஒருக்காலும் இல்லை. தங்களுக்குக் கீழ்ப்பட்ட மக்களைத் தங்கள் சொந்த நன்மையை உத்தேசித்து, எத்தகைத் துன்பத்திற்கும் ஆளாக்க, கொஞ்சமும் தயங்க மாட்டார்கள்.

நிற்க, கலையின் பேரால் மற்ற நாடுகளை பலாத்காரப்படுத்தும் ஜப்பான் தேசத்தின் நிலைதான் என்ன? அந்நாட்டினரின் நாகரிகந் தான் எத்தகையது? என்பன போன்ற சில விஷயங்களை இப்போது நாம் கவனிக்க வேண்டும்.

ஷிண்டோ மதத்தின் அடிமை மனப்பான்மை

முதலில் ஜப்பானியர்களுடைய மதக் கோட்பாடுகளை கவனிப்போம். புத்த மதம், சீனா, திபேத், ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பொது மதமாக இருந்த போதிலும், ஜப்பான் தேசத்திற்கே தனி மதம் ஒன்றிருக்கிறது. அதற்கு "ஷிண்டோயிஸ்ம்" என்று பெயர். இறந்து போன தங்களுடைய முன்னோர்களை வணங்குவது, அம்மதத்தைப் பின்பற்றுவோரின் முக்கியமான கடமைகளில் ஒன்று. அத்தகைய முன்னோர்களின், சிறப்பாக, சண்டையில் இறந்த வீரர்களையும், இறந்து போன தங்கள் சக்கிரவர்த்திகளையும், மிக உயர்வாகக் கருதிப் போற்ற வேண்டும். அரசு புரிந்து வரும் சக்ரவர்த்தி, எல்லா மக்கட்கும் மேற்பட்டவர். ஏறக்குறையக் கடவுளாகவே கருதப்பட்டவர். மக்கள் அவரைப் பார்க்கவும் கூடாது. அவர் வரும்போது, தலை பூமியில் படும்படியாக வளைந்து வணங்க வேண்டும். அதனால் அவரைப் பார்க்கவே முடியாமல் போகிறது. கோயில்க ளெல்லாம் அரசாங்கத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டவை. பூசாரிகள் அரசாங்கத்தின் உத்தியோகஸ்தர்கள். இத்தகைய கொள்கைகளாலும் ஏற்பாட்டாலும் மக்கள் தங்கள் நாட்டுக்காகச் சண்டை செய்ய வேண்டு மென்ற தீவிரமான எண்ணத்தையும், சக்கிரவர்த்தியின் கட்டளைக்கு எல்லா வகையிலும் கீழ்படிய வேண்டும் என்ற உறுதியையும், தங்களுக் கென்று சொந்த உரிமைகள் ஒன்றுமே யில்லை என்ற அடிமை மனப்பான்மையையும் அடைகின்றனர்.

தனி உரிமை உண்டு என்றே அறியாத வாழ்க்கை

இவ்வாறு அவர்கள் நினைக்கும்படியான சக்கிரவர்த்தி, உண்மையில் என்ன நிலையில் இருக்கிறார்? அவர் ஒரு கைதியைப் போலவே நடத்தப்படுகிறார். உண்மையில் அவருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. சேனைத் தலைவர்களும், பெரு நிலக் கிழவர்களுமே அந்த அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டு, அதை அரசர் பெயரால் மக்கள் நன்மைக்காக உபயோகிக்காமல், தங்கள் சொந்த நன்மைக்காக உபயோகப்படுத்துகின்றனர். ஆகவே ஜப்பானிய ஜனத் தொகையில் ஒரு மிக மிகச் சிறிய பகுதியான சேனைத் தலைவர்களும் பெருநிலக் கிழவர்களும், மிகப் பெரும்பகுதியான மற்றைய மக்களை அடிமை வாழ்வில் அழுத்தி யிருக்கிறார்கள். ஜப்பான் ஒரு விசித்திரமான நாடு. ஐரோப்பாவில் சிறந்து விளங்கும் நாடுகளைப் போல், கைத் தொழிற்றுறையில், மிக முன்னேற்ற மடைந்திருக்கிறது. பெரும் படைகளை ஏற்படுத்தி உலகத்தையே எதிர்த்து நின்று சண்டை செய்கிறது. ஆனால் மதத் துறையிலும் சமூக அமைப்பிலும், இன்னும் மிகக் கேவலமான நிலையில் இருந்து வருகிறது. மக்கள், தங்களுக்கென்று தனிவுரிமைகள் உண்டு என்பதையே அறியாத அடிமை வாழ்க்கை வாழ்கின்றனர்.

அரசாங்கத்தைக் கண்டிக்கும் முறை : தற்கொலை

அடுத்தபடியாக ஜப்பானிய அரசியல் எத்தகையது என்பதை நோக்குவோம். அவர்களுடைய அரசியல் ஏறக்குறைய ஜர்மானியருடைய தற்கால

அரசியலைப் போன்றது தான். ஜெர்மனியில் ஹிட்லர் என்ற ஒரே சர்வாதிகாரி; ஆனால் ஜப்பானில் பல சர்வாதிகாரிகள் இருக்கின்றனர். செல்வம் படைத்த ஒரு சில குடும்பங்கள், அரச அதிகாரங்கள் முழுவதையும் செலுத்துகின்றன. தாங்கள் அனுசரித்து வரும் மதக் கோட்பாடுகளின் விளைவாக, அரசர் பெயரால் செலுத்தப்படும் ஆணையை எதிர்க்க எந்த ஜப்பானியனும் துணிவதில்லை. மேலும் ஷிண்டோ மதத்தின் பயனாகத் தங்கள் நாட்டுக்காக போரிடுவது, தங்கள் தலை சிறந்த கடமை, என்று ஜப்பானியன் முழுமனதுடன் நம்புவதால், அந்த நம்பிக்கையை ஜப்பானியத் தலைவர்கள் பிற நாடுகளை தாக்கி, அவற்றின் உரிமைகளைப் பறிப்பதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றனர். ஒரு சில ஜப்பானிய மக்கள் இத்தகைய கொள்கைகளை எதிர்த்து மக்கள் உரிமைகள் நிலை பெறும்படியான அரசியலையும் சமூக அமைப்பையும் ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கலாம். ஆனால் அவர்கள் மிகக் கொடுமையாக அடக்கப்படுவார்கள். நாடெங்கும் உளவாளிகள் இருப்பதால், இத்தகைய எண்ணங்களும் முயற்சிகளும் ஆரம்பத்திலேயே நசுக்கப்படுகின்றன. இதனால் அரசாங்கத்தின் கொள்கைகளும் செயல்களும் யாருக்காவது பிடிக்காவிட்டால் அவர்கள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். இதுவே அவர்கள் அரசாங்கத்தைக் கண்டிக்க அனுசரிக்கும் முறை.

இத்தகைய சமூக அமைப்பையும் அரசியல் அமைப்பையும் கொண்ட ஜப்பான் தேசத்து ஆட்சிக்குள், வேறு நாடுகள் வருமானால் அவைகளிலும், இதைவிடக் கீழான ஆட்சி முறை தான் இருக்க முடியுமே யொழிய, மக்களுரிமையைப் பாதுகாக்கக் கூடிய ஒரு சிறந்த அரசாங்க அமைப்பு இருக்க முடியுமா, என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகவே, தற்போது ஜப்பானிய ரேடியோ நிலையத்திலிருந்து பரப்பப்படும் பேச்சுக்களை யாராவது நம்பலாமா? ஆசியாவை ஐரோப்பியருடைய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பது தங்களுடைய முக்கிய நோக்கம் என்று ஜப்பானியர் கூறுகின்றனர்.

இந்த ஜப்பானியர்கள் ஏன் சீனாவைத் தாக்கி அந்நாட்டின் உரிமைகளை அடியோடு அழித்து அந்நாட்டு மக்களை ஏன் அடிமைகளாக நடத்துகின்றனர்? சீனாவிலும் கொரியாவிலுமுள்ள மக்கள் பலவகையிலும் ஜப்பானியர்களைப் போன்றவர்களே. அவர்களும் மங்கோலிய இனத்தை சேர்ந்தவர்கள். உயரத்திலும் நிறத்திலும் இன்னும் பலவகையிலும், ஜப்பானியர்களுக்கும் அவர்களுக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. தங்களுடைய இனத்தை சேர்ந்த சீனர்களையும் கொரியர்களையும் அடிமைகளாக்கினர் ஜப்பானியர்.

பாதுகாக்கும் எண்ணம் கடுகளவும் கிடையாது

மேலும் 1915-ம் ஆண்டில் ஜப்பான் தேசத்தில் ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ஓ-மோட்-டோக்கியோ என்று பெயர். உலகத்தையெல்லாம் ஜெயித்து ஜப்பான் ஆட்சிக்கீழ் கொண்டுவர வேண்டுமென்பதே அவ் இயக்கத்தின் நோக்கம். ஆகவே 'எண்டிசையும் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும்' என்ற சாம்ராஜ்ய மனப்பான்மை ஜப்பானியத் தலைவர்களுக்கு நெடு நாட்களாகவே உண்டு என்பது விளங்குகின்றது. அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக, ஜப்பான் தன் சேனைகளை மிக அதிகமாகப் பெருக்கிக் கொண்டே வந்தது. அப்படை பலத்தால் நேச நாடுகளுக் கேற்பட்டுள்ள நஷ்டத்தையும் அறிந்திருக்கிறோம். ஆகவே பல நாடுகளை வென்று ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணம் தான் ஜப்பானுக்கு உண்டே ஒழிய, ஆசிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் எண்ணம் கடுகளவு கூடக் கிடையாது.

இவ்வாறு ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதால், ஜப்பானுக்கு பல வகைகளில் இலாபம் ஏற்படும். ஜப்பான், கைத்தொழிலில் மிக முன்னேற்றமடைந்த நாடு. அங்கு உற்பத்தியாகும் ஏராளமான பொருள்களை விற்று, அதனால் வரும் லாபத்தை அடைவதற்கு சௌகரியம் அளிக்கக் கூடிய அடிமை நாடுகள் பல, ஜப்பானுக்குத் தேவை. அத்தகைய அடிமை நாடுகளின் கைத்தொழில்களை நசுக்கி, தங்கள் நாட்டுச் சரக்குகளையே அங்கு ஜப்பானியர்கள் விற்பார்கள். அதனால் ஜப்பானிய ஆட்சிக்குள்பட்ட மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய முடியாதென்பது, சொல்லாமலே விளங்கும். மேலும் ஜப்பானிய அரசியல் கோட்பாடுகள் பற்றி முன்னரே சொன்னேன். ஜப்பானுக்குட்படும் நாட்டு மக்கள் அரசியல் அந்தகாரத்தில் வீழ்ந்து, பொருளாதாரத் துறையில் தாழ்ந்து, நூற்றுக்கணக்கான ஆண்டுகட்கு அடிமைகளாகவே வாழ்ந்து வர நேரிடும்.

மக்களை ஒடுக்க அபினிப் பழக்கம்

ஜப்பானியர் தாங்கள் ஜெயிக்கும் நாட்டு மக்கள் தங்களை எதிர்க்காமலிருப்பதற்கு அந்நாடுகளில் படைகளையும் இரகசிய போலீசாரையும் உளவாளிகளையும் வைத்திருப்பதும் அல்லாமல், இன்னும் ஒரு மிகக் கொடிய முறையையும் கையாளுகின்றனர். அஃதாவது, அந்நாட்டு மக்களின் தேக மனோபலத்தைக் குறைத்து அவர்களுடைய வீரத்தையும் ஆண்மையையும் அழித்து, சுதந்தர வேட்கையே தோன்றாதவாறு செய்வதற்கு, ஒரு மிகக் கொடுமையான முறையை அனுசரிக்கின்றனர். அது தான் அந்நாட்டு மக்களுக்கு அபீனை ஏராளமாக வினியோகிப்பது. ஒரு முறை அபினியுண்டு பழகியவர், அதை விடவே மாட்டார்கள். அபினி மயக்கத்தில் தங்களையே மறந்து தங்கள் நாட்டு நன்மையை மறந்து, ஆண்மையை இழந்து, அடிமை வாழ்க்கையில் ஆழ்ந்து அடிமைகளாக இருக்கிறோம் என்பதையும் அறியாது வாழ்வார்கள். அந்தோ! இது மிகக் கொடிய முறையல்லவா? ஜப்பானியர் இம்முறையை கொரியாவிலும், சீனாவிலும், தற்போது பர்மாவிலும், கையாளுகின்றனர்.

பிடிபட்ட நாடுகளில் ஜப்பானியப் படையினர் செய்யும் அக்கிரமங்கள் கொஞ்சமல்ல. மனிதத் தன்மைக்கு ஏலாத விலங்குகட்கே உரிய பல காரியங்களை அவர்கள் செய்கின்றனர். உதாரணமாக சண்டையில் பிடிபட்ட கைதிகளை வரிசையாக நிற்க வைத்து, அவர்களை துப்பாக்கிகளால் சுட்டுக் குறி பழகுகின்றனர். அவர்களை கத்திகளால் குத்தி கத்திச் சண்டையில் பயிற்சி பெறுகின்றனர். இதை விடக் கோரமான செயல்களும் பல.

ஆகையால் நாம் நேச நாடுகளுக்கு பல துறைகளிலும் உதவி செய்து, ஜப்பானியர் தோல்வியைத் துரிதப் படுத்த வேண்டும். முக்கியமாக நாம் செய்யக் கூடியது ஜப்பானியருடைய கெட்ட எண்ணத்தை மக்கள் அறியுமாறு எடுத்துக் கூறி, யாராவது ஜப்பானால் நமக்கு நன்மை ஏற்படும் என்று சொன்னால், அவர்கட்கு நற்புத்தி புகட்டுவதே யாகும்.

"யுத்தகாலத்தில் அரசாங்க உதவி"

சென்னை

அக்டோபரில், சென்னையிலும் சென்னையை அடுத்த ஜில்லாக்களிலும் பலத்த மழை பெய்தது. அதனால் பல ஏரிகள் நிறைந்து, உடைப்பெடுத்த காரணமாக, நகரின் பாகங்களெல்லாம் வெள்ளப் பெருக்காய் விட்டது. பள்ளங்களிலிருந்த குடிசைகளும், வீடுகளும் பாழாய் விட்டன. குடிசைகளையும் வீடுகளையும் இழந்து தங்க இடமில்லாமல் தத்தளித்து வருந்திய ஏழைப் பொது மக்களுக்கு, சென்னை கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்கள் திறந்து விடப்பட்டன. அத்துடன் அம்மக்களுக்கு இலவசமாக பல நாட்கள் உணவு அளிக்கப்பட்டது. சென்னை தேசியப் போர் முனையின் அமைப்பாளரும் அவரது ஆதிக்கத்திற் குட்பட்ட உத்தியோகஸ்தர்களும் வெள்ளத்தால் கஷ்ட மடைந்தவர்களுக்கு உணவு பங்கிடுத் தொண்டில் ஈடுபட்டிருந்தனர். குடிசைகளை இழந்த ஆயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு மீண்டும் குடிசைகள் கட்டிக் கொடுக்க ஒரு பெருந் தொகையை அரசாங்கம் சென்னை கலெக்டரிடம் ஒப்படைத்திருக்கின்றது. அவர் அந்தப் பணியை தீவிரமாகச் செய்து வருகிறார்.

அரிசி:—நகரில் அரிசி பங்கீடு முறை வந்த பிறகு யாவருக்கும் எளிதில் அரிசி கிடைக்கிறது. மேலும் முன் கணக்கிட்டபடி மாதம் ஒன்றுக்கு 11,000 டன் அரிசி தேவை யில்லையென்றும், 9,000 டன் அரிசி போதும் என்றும் நன்கு விளங்குகிறது. குடும்பத்தினர் மாதம் ஒன்றிற்கு இரண்டு அல்லது மூன்று முறை தான் வாங்குகின்றனர். கள்ளத் தனமாக அரிசியை விற்று கொள்ளை யடித்தவர்களின் கொட்டம் அடக்கப்பட்டு விட்டது.

விறகு: — வெள்ளத்திற்குப் பிறகு, மீண்டும் விறகுப் பஞ்சம் தலைகாட்டி விட்டது. அதிக விலைக்கு விற்று, கொள்ளை யடிப்பவர்களின் கொட்டத்தை யடக்க வேண்டி, தேசீயப் போர்முனை சார்பாக நான்கு விறகு தொட்டிகள் திறக்கப்பட்டு ஓரளவுக்கு பஞ்சத்தை சமாளித்து வருகின்றனர். என்றாலும் அரிசியைப் போல் இதற்கும் பங்கீடு முறையை கொண்டு வர அரசாங்கத்தார் யோசித்து வருகின்றனர்.

மண்ணெண்ணெயும் சர்க்கரையும் யாவருக்கும் தேவையான அளவு கிடைக்கின்றன.

ராமதீப விளக்கு சென்னை மவுண்ட் ரோடிலுள்ள சென்னை தேசீய போர்முனை அமைப்பாளர் ஆபீசில் (வெற்றி மாளிகையில்) விற்கப்பட்டு வருகின்றது.

நீலகிரி

1. நஞ்சநாடு கிராமத்திற்கு 1943-ம் வருடம் அக்டோபர்மீ 19உயில் உதவி அமைப்பாளர் திரு மு. ஹாலையா விஜயம் செய்த பொழுது, அக்கிராமவாசிகள் தங்களுக்கு போதிய அரிசி கிடைப்ப தில்லை என்று முறையிட்டனர். அமைப்பாளர் அதை தாசில்தாரிடம் சொல்லி, அரிசி கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

2. உணவுப் பொருள்களை (முக்கியமாக அரிசியை) பங்கிடும் திட்டம் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும். தேசீயப் போர் முன்னணியின் நபர்கள் வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனர்.

3. உதவி அமைப்பாளர் தனது சுற்று பிரயாணத்தின் போது, சில இடங்களில் இந்தியப் போர் வீரர்களது குடும்பங்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகள் சிலவற்றை நிவர்த்தி செய்திருக்கிறார். தாலூகா பிரசாரகர்கள் தத்தமது எல்லைக்குள் வசிக்கும் வீரர்களுடைய குடும்பங்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்திருக்கிறார்கள்.

கௌரவ அமைப்பாளர் திரு ராமா கவுடர் ஏழை விவசாயிகளின் உருளைக்கிழங்குப் போக்குவரத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதில் ஈடுபட்டிருக்கின்றார்.

செங்கல்பட்டு ஜில்லா

இம்மாதம் குறிப்பிடக் கூடிய முக்கியமான சம்பவம் என்னவென்றால்: இது வரையில் எதிர் பாராத பெருத்த மழை தான். இது வரையில் இந்த செங்கல்பட்டு ஜில்லாவில் இம்மாதிரியான மழை பெய்ய வில்லையாம். அதனால் ஏற்பட்ட சேதங்களும் அளவிட முடியாதன. அக்டோபர் மாதம் 8, 9, 10-ம் தேதிகளில் சாதாரண மழையாகப் பொழிந்தது; 10-ம் தேதி இரவு கனத்த மழையாக சுமார் 20 அங்குலத்திற்கு மேலாகவே ஒரே தடவையில் பெய்து, ஏரி குளங்கள் அனைத்தும் கரை புரண்டது மல்லாமல், மிக முக்கியமான பெரிய ஏரிகளான ஸ்ரீபெரும்புத்தூர் ஏரி, நேமம் முதலிய இடங்களில் கரைகள் உடைந்து, சேத மேற்பட்டது. இப்பொழுது சுமார் 20 நாட்களுக்கு மேலாகியும் அநேக பொது ரஸ்தாக்கள் போக்கு வரத்துக்கள் இல்லாமல் இருக்கின்றன. ஜில்லாவிலுள்ள ஆறுகளில் இன்னும் பிரவாகம் போய்க் கொண்டு இருக்கிறது.

காஞ்சிபுரத்திற்கு, சென்னையிலிருந்து போவதற்குப் பாதை இல்லாமல் இரண்டு மூன்று நாட்கள் தடைப்பட்டு விட்டது. இப்பொழுது செங்கல்பட்டு வழியாகத் தான் மோட்டார்கள் ஓடுகின்றன. சைதாப்பேட்டையின் அருகில் ரயில்வே பாலம் உடைப்பட்டு ரயில் வண்டிகள் போக்கு வரத்துக்கள் தடைப்பட்டு விட்டன. சுமார் ஒரு வாரமாகத் தான் சென்னைக்கு நேராக ரயில் வண்டிகள் போகின்றன. வயல்கள், தோப்புகள், கிராமங்கள், ஆடு மாடுகள், வீடுகள், மனிதர்கள் அடைந்த சேதங்களின் தகவல்கள் பூராவாய்க் கிடைக்க வில்லை. இச்சேதங்கள் அதிகமென்று தெரிகிறது. அநேக வயல்கள் இருந்த இடம் தெரிய வில்லை. மண்மேடிட்டு விட்டன.

விறகு அதிக விலைக்கு விற்கிறது. அனேக இடங்களில் கிடைக்க வில்லை.

ஜில்லா கலெக்டர் அவர்கள் தாமே அநேக இடங்களைப் பார்வை யிட்டதுமல்லாமல், உடைப்புகளை மூடுவதற்கு வெகு துரிதமான வேலைகள் நடைபெறுகின்றன. ரோட்டுகளையும் பழுது பார்த்துக் கொண்டு வருகிறார்கள். சென்னை அரசாங்கத்தார் இதற்கென்று 10,000 ரூபாய் பொருளுதவி செய்திருக்கிறார்கள். கலெக்டர் அவர்கள், உணவுப் பஞ்சத்தினால் ஏற்பட்ட தடை உத்தரவுகளை காஞ்சிபுரம், மதுராந்தகம், செங்கல்பட்டு தாலூக்காக்களில் ரத்து செய்து விட்டார்கள். இதனால், இப்பொழுது நெல் யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

தேசீய போர் முன்னணி ஆர்கனைசர் அவர்களும், கலெக்டரும், ஏனைய உத்தியோகஸ்தர்களும் பொது மக்களுக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ, அவ்வளவும் புரிந்து வருகிறார்கள். சமீபத்தில் ஏற்பட்ட வதந்திகளைத் தடுப்பதற்கு துரிதமான வேலைகளைச் செய்தார்கள். இந்த ஜில்லாவில் மிகப் பெரிய செம்பரம்பாக்கம் ஏரி உடைந்து விட்டதென்றும், அதனால் சைதாப்பேட்டை, சென்னை முதலிய இடங்களுக்கும் ஆபத்து நேரிடுமென்றும் கிளம்பிய வதந்திகளை உடனே தக்க தகவல்களுடன் பொது மக்கள் பயப்படாதிருக்கும்படியாக எச்சரிக்கை செய்தார்கள்.

"ஸ்டாண்டர்ட்" துணி இந்த ஜில்லாவில் வெகுவாகச் செலவாகிறது.

சைதாப்பேட்டை, திருவொற்றியூர், செம்பியம், பெரம்பூர் முதலிய இடங்களில் "பங்கீடுச் சீட்டுகள்" வழங்கப்பட்டிருக்கின்றன. நவம்பர் முதல் தேதியிலிருந்து சென்னையைப் போல், இங்கும் அரிசிப் பஞ்சம் நீங்கி விடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மண்ணெண்ணெயும், சர்க்கரையும் இப்பொழுது சுலபமாக எல்லோருக்கும் கிடைக்கிறது.

வெள்ளத்தினால் வீடுகளையும், குடிசைகளையும், இழந்தவர்களுக்கு, கலெக்டர் அவர்களும், சில பிரமுகர்களும் தங்களாலான உதவி செய்து வீடுகளை இலவசமாக கட்டிக் கொடுக்கிறார்கள்.

ஜெர்மனியில் பெரும் பீதி

பஞ்சம் தலைவிரித்தாடுகிறது

ஜப்பான் தடுமாற்றம்

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து நவம்பர் மாதம் 1-ம் தேதி த. பா. நித்தியானந்தம் அவர்கள் ஒலி பெருக்கிய யுத்த விமர்சனமாவது :—

நேச நாடுகளுக்கு எல்லா விடங்களிலும் வெற்றி. இது கண்டு அச்சு அரசாங்கங்கள் ஆட்டங் கொடுத்துவிட்டன. மாஸ்கோவில் மூவரசு மகா நாடு நடை பெறுகிறது. இந்த மகா நாடு நடைபெற ஒட்டாதபடி ஜெர்மானியர் பல சூழ்ச்சிகள் செய்தனர். நேச நாடுகளுக்குள் மன வேற்றுமையை யுண்டாக்க, பல வகைகளிலும் முயற்சித்தனர். ஆனால், அம்முயற்சிகள் பலிக்க வில்லை. பிறகு, அம்மகா நாடு வெற்றி பெற முடியாது எனத் தக்க முறையில், பிரசாரம் செய்தனர். இதுவும் பலிக்க வில்லை. அம் மகாநாட்டு நடவடிக்கைகள் வெற்றிகரமாகவே நடந்து வருகின்றன.

"எண்ணெய்ச் செலவே யொழிய பிள்ளை பிழைக்கவில்லை"

இது கண்ட ஹிட்லருக்கு பீதியாகி தன் கட்சித் தலைவர்களை யழைத்தார். ஒரு கூட்டம் கூட்டினார். கலந்து பேசினார். பிறகு தன் இராணுவத் தலைவர்களை யெல்லாம் கூட்டினார். கலந்து பேசினார். என்ன தான் பேசியும் பயனென்ன? "எண்ணெய்ச் செலவே யொழிய, பிள்ளை பிழைத்த பாடில்லை" என்பது போல, கூட்டங்கள் கூடிப் பேசினார்களே யொழிய, அதனால் எவ்வித நன்மையையும் அவர்கள் அடைந்ததாகத் தெரியவில்லை. ஒரு விஷயம் மட்டும் விளக்கமாகத் தெரிகிறது. அதாவது ஜெர்மன் மக்களுக்குள் உண்டாயிருக்கும் பீதியை எப்படிப் போக்குவது என்பது பற்றி ஹிட்லர் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார். இப்படி அவர் கவலைப்படுவதற்குக் காரணங்கள் எவை? ஜெர்மானியர்கள் ரஷ்யப் போர் முனையில் படு தோல்வி யடைந்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட தோல்வி இது வரை, இந்தப் போரில் அவர்கள் அடைந்ததே கிடையாது என்று சொல்லலாம். தாம் ருஷ்யப் போராட்டத்தில் வெற்றி பெறலாம்; ஸ்டாலின் கிராடைக் கைப்பற்றிவிடலா மென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த ஜெர்மன் பொது மக்களுக்கு, இந்தத் தோல்விகளால் பெரும் பீதி உண்டாகி யிருக்கிறது.

ஜெர்மானியர் வெளியேற்றம்

இது மட்டுமா? இடைவிடாது இரவும் பகலும் நேச நாட்டு விமானங்கள் ஜெர்மன் நகரங்கள் மீதும், குறிப்பாகத் தொழிற்சாலைப் பகுதிகளிலும் குண்டுகளை வீசிய வண்ணமாகவே யிருக்கின்றன. இதனால் அங்குள்ளவர்கள் வெளியேற நேருகிறது. ஆகவே, உள் நாட்டு நிர்வாகம் சீர்குலைய இடங் கொடுக்கிறது. நிர்வாகம் சீர்குலைந்தால், மக்கள் பீதி கொள்ளுவது இயற்கை தானே. போதாக் குறைக்கு ஹிட்லரின் உற்ற துணைவராக விருந்த முசோலியின் ஆதிக்கம் அழிந்தது. ஜெர்மனிக்கு முதல் அரண் போலிருந்து வந்த இத்தாலி, பிளவுபட்டு விட்டது. தம் நீர் மூழ்கிக் கப்பல்களைக் கொண்டே வெற்றி பெற்று விடலாமென்று மனோராஜ்யம் செய்து கொண்டிருந்த ஜெர்மானியர்கள் ஏமாந்தார்கள். அவர்களுடைய நீர்மூழ்கிக் கப்பல்களை நேச நாட்டுக் கப்பற் படையும் விமானப் படையும் வேட்டையாடி நாசம் செய்கின்றன. அல்லாமலும், சிசிலியை நேச நாடுகள் கைப்பற்றிவிட்டன. இத்தாலியின் தென் பகுதியில் அடுத்தடுத்து வெற்றிகள் பெற்று வருகின்றன. அன்றியும் ஜெர்மனியின் இடுப்பை முறிக்க வேண்டி, மத்திய தரைக் கடலையடுத்துள்ள நாடுகளின் அரசியல் நிலைபற்றியும் இராணுவ நிலை பற்றியும் ஆராய்ச்சி செய்யும் பொருட்டு, சோவியத் ரஷ்யாவிலிருந்து ஒரு தூதுக் கோஷ்டி கிளம்புகிறது. இதன் பிரதிநிதி சோவியத் அன்னிய நாட்டு டிப்டி கம்மிசாரான தோழர் ஆண்ட்ரு விஷின்ஸ்கி. இப்போது மாஸ்கோவில் நடைபெறும் மூவரசு மகாநாட்டிற்கும் இவர் சோவியத் பிரதிநிதியாக இருக்கிறார். ஆகவே, அந்தத் தூதுக் கோஷ்டி, இந்த மகா நாடு முடிந்த பிறகு தான் கிளம்பு மெனத் தெரிகிறது. அன்றியும் இந்த மகா நாட்டில் செய்யப்படும் முடிவுகள், அந்தத் தூதுக் கோஷ்டியினுடைய வேலைகளையும் எளிதாக்கக் கூடும். ஆகவே தான், இந்தத் தூதுக் கோஷ்டி, புறப்படுந் தேதியைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். மத்தியதரைக் கடல் பகுதிகளில் ஜெர்மன் படைகளுக்கு நேச நாட்டுப் படைகள் தகுந்தபடி வேலை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. 'மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி' என்பார்கள், அது போல, ஜெர்மனி கிழக்கே செம் படைகளைச் சமாளிக்க வேண்டும். தெற்கே நேச நாட்டுப் படைகள் முன்னேற வொட்டாதபடியும் தடுக்க வேண்டும். இது மட்டுமா? தாம் கைப்பற்றியுள்ள நாடுகளில் கலவரங்கள் நிகழாதபடி காப்பாற்றிக் கொள்ளவும் வேண்டும். இது பற்றி ஜெனரல் அலெக்சாந்தர் செப்டம்பர் மாதம் 3-ம் தேதி கூறியதாவது :—

ஜெர்மன் படைகளை நேசப் படைகள் கட்டிப்போட்டு விட்டன

"கிழக்கே ரஷ்யப் போர் முனையில் போராடக்கூடிய ஜெர்மன் படைகளில் பெரும் பகுதியை நேச நாடுகளைச் சேர்ந்த 5-ம் படையும், 8-ம் படையும் இங்கே கட்டிப் போட்டு விட்டன" என்று கூறினார். அது போலவே, ரஷ்யப் போர் முனையிலிருந்து ஏன் ஜெர்மன் படைகள் பின்வாங்குகின்றன வென்று விளக்கி ஜெர்மானியரான ஜெனரல் டிட்மாரும் கூறினார். அவர் கூறியதாவது: "இந்தக் கோடை காலத்தில் மற்ற போர் முனைகளுக்கும் படைகளை வெகுவாக அனுப்ப வேண்டி யிருந்ததால், மிகவும் குறைவான அளவிற்குத் தான் ரஷ்யப் போர் முனையில் நம் படைகளை வைத்திருக்க முடிந்தது" என்று கூறுகிறார்.

ஜெனரல் அலெக்சாந்தர் கூறிய மொழிகளுக்கும் இவர் கூறிய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை இங்கே கவனிக்கத் தக்கது. மற்றொரு விஷயம் பற்றியும் நாம் கவனிக்க வேண்டும். ரஷ்யப் போராட்டம் ஆரம்பமான போது, மழை காலத்தில் மாஸ்கோ நகருக் கருகில் ஜெர்மானியர்களுக்கு ஒரு தோல்வி ஏற்பட்டது. அப்போது பீதி கொண்ட அச்சுப் படை உத்தியோகஸ்தர்களையும் படையினரையும் நூற்றுக் கணக்கில் ஹிட்லர் வேட்டை யாடிக் கொன்றார்.

ஹிட்லருங்கூட பீதி கொண்டிருக்கிறார்

இப்போது ஜெர்மனி முழுதும் பீதி ஏற்பட்டிருக்கிறது. ஏன், ஹிட்லருங் கூட பீதி கொண்டிருக்கிறார் என்று கூறலாம். இப்போதும் அவர் அதே முறையைக் கையாளத் துணிவாரா? துணிவதா யிருந்தால், அவர் தன்னைத் தானே சுட்டுக் கொள்ள வேண்டியது தான். கடுமையான எதிர்ப்புக்களுக்கு அவர் இப்போது உள்ளாகி யிருக்கிறார். இந்த மாதம் அவருக்குக் கருப்பு மாதமாகவே யிருக்கிறது. உள் நாட்டில் தோல்வி மனப்பான்மை பெருகிக் கொண்டு வருகிறது. இதை ஒடுக்கத் தான் தன் கட்சித் தலைவர்களையும் இராணுவத் தலைவர்களையும் அவர் தருவித்துப் பேசினார். வதந்திகளைக் கிளப்பி விட்டு தோல்வி மனப் பான்மையைப் போக்க முயன்றார் டாக்டர் கொப்பல்ஸ். ஆனால் முடியவில்லை. இது பற்றி பாதிரிமார்கள் தம் கோவில்களில் செய்யும் பிரசங்கங்களிலும் குறிப்பிடுகின்றார்கள். அப்போதும் அந்த நிலைமை மாறவில்லை. தொழிலாளர்களிடையே, ரஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப் போவதாகவும், பணக்காரர்களிடையே பிரிட்டனோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப் போவதாகவும், வதந்திகளைக் கிளப்பிவிட்டார்கள். இந்தப் பிரசாரத்தை வீணாக்கின, ஜெர்மன் பத்திரிகைகள். எப்படியென்றால், நாள் தோறும் ரஷ்யர்கள் வெற்றி பெறுவதைக் குறித்தும் பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்களைக் குறித்தும் பிரசுரித்தன. ஆகவே, ஜெர்மன் பொது மக்கள், இந்த வதந்திகளை நம்ப மறுத்தனர்.

உணவுப் பஞ்சமும் தொழில் நெருக்கடியும்

டாக்டர் கொப்பல்ஸ் 3 வாரங்கள் ஜெர்மனியின் தெற்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். உணவுப் பொருள்கள் முதலியவற்றின் வியாபார நிலைமை மிகவும் நெருக்கடியா யிருக்கிறது. தொழிற் சாலைகளிலோ தொழிலாளிகளும் ஒழுங்காக வேலைக்கு வருவதில்லை. தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல வகை உலோகங்களும் கிடைப்பதில்லை. ஆகவே, தளவாட உற்பத்தி மிகவும் அங்கே தடைப்பட்டிருக்கிறது. போதாக் குறைக்கு அங்கே யுத்தக் கைதிகளா யுள்ளவர்களும், வெளி நாடுகளிலிருந்து கொண்டுவரப் பட்டிருக்கும் தொழிலாளிகளும் 5-ம் படை வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இது ஹிட்லர் பெரிதும் அஞ்சத் தக்க நிலைமை தான்.

இத்தாலியில் ஜெர்மன் படைகள் பீதி

இத்தாலியில் ஜெர்மானியர்கள் பெரும் படைகளைக் கொண்டு போராடுகிறார்கள். இயற்கையும் அவர்களுக்குச் சாதகமா யிருக்கிறது. ஆறுகளும் மலைகளும் அங்கே அதிகம். ஆகவே, தற்காப்புப் போராட்டத்தை எளிதில் நடத்தலாம். என்றாலும் இங்கும் ஜெர்மானியர்களுக்குத் தோல்வி தான். இதற்குக் காரணம், நேச நாட்டுப் படைகளின் மிகச் சிறந்த போர்த் திறமை மட்டுமல்ல. ஜெர்மன் படைகள், பீதி கொண்டிருக்கின்றன. தன்னம்பிக்கையை இழந்துவிட்டன. தான் பலங் குன்றியிருக்கும் போது, தன் நண்பனின் உதவியாவது கிடைக்குமா என்று ஹிட்லர் நினைத்திருக்கக் கூடும். இது இன்னும் மோசமான நிலைமையிலிருக்கிறது.

சமீபத்தில் ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள ஒரு வானொலி நிலையத்திலிருந்து பொறுப்புள்ள ஜப்பானிய உத்தியோகஸ்தர் கூறிய மொழிகள், ஜப்பானின் நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அவர் சொல்லுகிறார்: "நாம் நமது கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும். ஜப்பானிய சரித்திரத்திலேயே ஏற்பட்டிராத பெரிய தோர் நெருக்கடியில் ஜப்பான் இப்போது சிக்கிக் கொண்டிருக்கிறது. நமது நாட்டிற்கே மகா கொடிய நாசம் உண்டாகலாம்" என்று அவர் கூறினார். இந்த மொழிகளின் ஒவ்வொரு அணுவிலும் பீதி தான் ஒலிக்கிறது.

ஜப்பானியர் மீது ஒரே நாளில் 221 டன் வெடிகுண்டுகள்

சென்ற செப்டெம்பர் மாதம் 8-ம் தேதி மற்றொரு ஜப்பான் விமர்சகர் கூறியதாவது :—

பசிபிக் மகா சமுத்திரத்தின் தென் கிழக்குப் பகுதியில் தமக்கு நேர்ந்த சேதத்தைப் பற்றிக் கூடத் தான் கவலைப் படவில்லையாம். எதிரி தளங்களுக் கருகில் தாம் போகாது, தம் தளங்களுக் கருகில் எதிரிப் படைகளை வரும்படிச் செய்வது தான் தம் யுத்த தந்திர முறை என்று சொன்னார். இந்த 2 மாதங்களுக்குள்ளாக நிலைமை வெகுவாக மாறிவிட்டது. நியூ கினியின் வட கரையை மீண்டும் கைப்பற்ற அரும்பாடு படுகின்றனர். பின்ஸ்சேபன் துறை முகத்தை மீட்கும் பொருட்டு மகா கடுமையாக ஜப்பானியர்கள் போராடினார்கள். போராடியும் பயனென்ன? நேச நாட்டுப் படைகள், அந்தத் துறைமுகத்திற்கு வடக்கே நடைபெற்ற போராட்டத்தில் ஒரு நாளில் மட்டும் 221 டன் வெடி குண்டுகளை ஜப்பானியப் படைகள் மீது எறிந்தார்கள். அந்த வெடி குண்டுகளால் எவ்வளவு நாசம் ஏற்பட்டிருக்கு மென்று நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகையால் தான், ஜப்பானியர்களுக்கும் பீதி யுண்டாகி விட்டது. நேச நாட்டுப் படைகள் பெருந் தோல்விகள் அடைந்த காலம் உண்டு என்றாலும், ஒரு போதும் பீதி கொண்டதில்லை. தோல்விகளெல்லாம் வெற்றியின் முதற்படி என்னும் கொள்கையைக் கடைப்பிடித்தனர். அதன்படியே வெற்றிமேல் வெற்றி பெற்று வாகை சூடுகின்றனர். அச்சு நாடுகள் சுய நன்மைக்காகப் போராட ஆரம்பித்தன. நேச நாடுகளோ பொது நன்மையை முன்னிட்டுத் தான், போரில் இறங்கின. ஆகவே, முடிவில், தன்னலம் தோற்கும்; பொது நலம் வெல்லும். உலக சரித்திரமே இதற்குச் சான்று. நீதி நூல்களும் இதையே தான் வலியுறுத்துகின்றன.

மீண்டும் ஏமாந்த சோணகிரியா ?

சோணகிரிக்கு நல்ல பசி. ஒரு வீட்டுத் திண்ணை மீது உட்கார்ந்திருக்கிறான். எதிர் வீட்டிலே ஏதோ பணியாரம் பண்ணுகிறார்கள். வாசனை மூக்கைப் பிய்க்கிறது. அந்தப் பணியாரத்திலே நமக்குக் கொஞ்சம் கொடுக்கமாட்டாங்களா என்று எண்ணிக் கொண்டிருக்கிறான் அவன். எதிர் வீட்டிற்குள்ளே இருக்கும் பெண்மணி ஒருத்தி, வீட்டிற்குள்ளே இருந்தபடியே அவனைப் பார்க்கிறாள். கொஞ்ச நேரம் கழித்து, ஒரு காகிதப் பொட்டலத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியே வருகிறாள். நமக்குத் தான் ''ஏதோ கொண்டு வருகிறா''கள் என்று சோணகிரி ஓடியே போய், மேல் வேஷ்டியை விரித்துக் கொண்டு நிற்கிறான். பொட்டலத்தோடு வந்தவள் என்ன ?' என்று கேட்கிறாள்.

'என்னமோ கொணுந்தீங்களே, எனக்குத் தானே பணியாரம் ?' என்று கேட்கிறான். அந்தப் பெண்மணி சிரித்துக் கொண்டே, பொட்டலத்தை தூர எறிகிறாள். வீட்டைப் பெருக்கிவிட்டு குப்பையை ஒரு பொட்டலமாக எடுத்து வந்திருக்கிறாள் அவள். ஆகவே அதை எறிந்துவிட்டு, உள்ளே போய்விட்டாள். வெறும் சோணகிரி ஏமாந்த சோணகிரி ஆனான். அவனுடைய பசியும் அதிகமாகி விட்டது. பேசாமல் போய், திண்ணை மேலே ஏறி உட்கார்ந்து கொண்டான் ஏக்கத்தோடு.

இதே மாதிரி தான் ஜெர்மனியும் ஆகிவிட்டது. ஏற்கெனவே ஓரிரு தடவைகள் அது ஏமாந்த சோணகிரியாகி, அவமான மடைந்தாகிவிட்டது. தொடர்ந்த விமானத் தாக்குதல்களால், அதிலும் பொது ஜனங்கள் மீது குண்டு மழை பொழிவதால், அவர்களது மனோதிடத்தைக் குலைத்து விடலாம் என நாஸிகள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். லண்டன் நகரைப் பாழாக்கினார்கள். ஆனாலும் பிரிட்டிஷாரது மன உறுதி குலையவே இல்லை. அவர்களது ஆத்திரம் தான் அதிகமாயிற்று.

உலகமே தூங்கிக் கொண்டிருக்கிறது. நாம் ஒருவர் தான் ரகசியமாகக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். இப்பொழுதே திடீரெனப் பாய்ந்தால், விடிவதற்குள் எல்லோரையும் 'கபக்' என அமுக்கி விடலாம். அப்புறம், நாமே உலகுக்கே அதிபதி என்று மனக்கோட்டை கட்டினார் ஹிட்லர். பயங்கரமான இந்த இரண்டாவது மகா யுத்தத்தைத் தொடங்கினார். அவர் பாய்ந்த வேகத்திலே, பல நாடுகள் தள்ளாடி விழுந்த தென்னமோ வாஸ்தவந் தான். அதுவே அவரது ஏமாற்றத்திற்கான முதல் காரணம் என்று இப்பொழுது சொல்லலாம். உலகிலே எல்லா நாடுகளுமே இப்படித் தானிருக்கும் என்ற நினைப்பை அவரது மனசிலே ஏற்படச் செய்தவை, அவருக்கு ஆரம்ப காலத்தில் கிடைத்த வெற்றிகள் தான்.

ஹிட்லர் அடைந்த ஏமாற்றம்

அந்த நினைப்பு இல்லாதிருந்தால், 'பத்தே வாரத்தில் பைஸல் செய்து விடுகிறேன்' என்று அவர், தமது அருமையான ஜெர்மன் படைகளை, சாது போலிருந்த சோவியத் ருஷ்யா மீது தூண்டி விட்டிருப்பாரா ? இதிலே தான் ஹிட்லரும், ஜெர்மானியரும், உலகம் உள்ளளவும் மறக்க முடியாத பெரிய ஏமாற்றத்தை அடைந்தார்கள். ஏமாந்த சோணகிரிகள் என்று ஹிட்லரையும், அவரோடு சேர்ந்தவர்களையும் தவிர, வேறு யாரையுமே இனிச் சொல்ல முடியாது.

அது ஆயிற்று ? ஜெர்மனி போன யுத்தத்திலே இருந்தது போலவே, யுத்தம் எதையும் கண்ணாலேயே பாராது நிம்மதியாக இருக்கப் போகிறது என்று ஜெர்மானியர் எண்ணி யிருந்திருப்பார்கள். ஹிட்லர் கூட அப்படித் தான் நினைத்திருப்பார். அதனால் தான், சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர் ஜெர்மனிக்குள்ளே செய்து வைக்கவில்லை என்று தெரிகிறது.

சில தினங்களுக்கு முன் ஜெர்மன் வாயாடி துரை டாக்டர் கொப்பல்ஸ் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா ? 'ஜெர்மனியின் சுய பாதுகாப்பு பலம் வாரத்திற்கு வாரம் அதிகமாகிக் கொண்டு வருகிறது' என்று கூறியிருக்கிறார் அவர். இதிலிருந்து என்ன தெரிகிறது ? இதுவரை ஜெர்மனியில் சரியான பாதுகாப்பு பலம் இல்லை என்று தானே ?

பாவம் ! தினம் விடிந்தால் அமெரிக்க, கானடிய, பிரிட்டிஷ் விமானிகள் பெர்லின் எங்கே, ஹாம்பர்க் எங்கே, ரூர் பிரதேசமெங்கே, வியன்னா எங்கே, ஸ்டட்கார்ட் எங்கே என்று தேடிச் சென்று, பகலிலும் இரவிலும் எந்நேரத்திலும் பயமில்லாது நொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். யுத்தத்திற்கு உயிரளிக்கும் தொழிற்சாலைகள் எல்லாம் பாழாகிக் கொண்டு வருகின்றன. இந்த வருஷம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து, அக்டோபர் 25-ந் தேதிக்குள், பனிரெண்டு ஜெர்மன் நகரங்களில், நேச தேச விமானப்படை யெடுப்பால் மட்டும், ஒரு லக்ஷத்து இரண்டாயிரத்து நானூற்றெண்பத்தாறு பேர்கள் மண்டையைப் போட்டிருப்பதாக, ஜெர்மன் ரேடியோவே சொல்லிற்றும்.

ஜெர்மனியில் எந்த இடமும் பத்திரமில்லை

நேசதேச விமானப் படை யெடுப்பால், வீடிழந்து, வாசலிழந்து, சொத்திழந்து, சுகம் குறைந்து தவிக்கும் மக்களின் எண்ணிக்கையோ கோடிக் கணக்கிலிருக்கும். எந்த இடமும் ஜெர்மனியில் பத்திரமில்லை என்ற நிலைமையை நேசதேச விமானிகள் ஏற்படுத்தி விட்டார்கள். ஆகவே ஏழை ஜனங்கள் சித்தப்பிரமை பிடித்தவர்கள் போல், 'தேவுடா !' என்று இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

'சாமி பகவானே ! எப்படியாவது இந்த ஏழவு யுத்தம் நின்னாத் தேவலையே ! ஜெயம், தோல்வி அதைப் பத்தி நமக்கென்ன வந்தது ?' என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

வியாபாரிகளுக்கோ, நஷ்டம் கொஞ்சநஞ்ச மில்லை. லாபம் சம்பாதித்தாலும் கழுத்துக்குக் கத்தி ; சும்மா யிருந்தாலும் சுகமில்லை. வியாபாரம் செய்யவும் அதிகச் சரக்கில்லை. அவர்களும் சீக்கிரமே யுத்தம் முடிய வேண்டு மென்று தான் நினைப்பார்கள்.

அரசாங்கத்தில் சம்பந்தப்பட்டவர்களோ நைப்பாசையோடு தானிருப்பார்கள் 'ஜெர்மானியர் எவ்வளவு கஷ்டமானாலும் சமாளிப்பார்கள்,' கடைசி வரை ஒரு கைபார்த்து விடவேண்டியது தான் ! யுத்தம் என்றால் எப்பொழுதுமா ஜெயம் வந்து கொண்டே யிருக்கும் ! அதனாலே இதோடு விட்டுவிடக் கூடாது' என்றுதான் நினைப்பார்கள். சும்மா விட்டுக் கொடுத்துவிட்டால், நேசதேசத்தார் சும்மா விட்டு விடுவார்களா ? இந்த யுத்தத்திற்குக் காரணமாக இருந்த தலைகளை யெல்லாம் பிடித்து, விசாரணை செய்து, தக்க தண்டனை கொடுக்கமாட்டார்களா ? அந்த பீதி, நாஸி அதிகார வர்க்கத்தினருக்கு இருப்பது இயற்கை தானே ?

மொத்தத்திலே, பெரும்பான்மையோர், ஜெர்மனியிலே யுத்த முடிவைத் தான் விரும்புவதாகக் கூறப்படுகிறது, நாஸி சேனாதிபதிகளில் கூட சிலருக்கு ஹிட்லர் கையாளும் முறைகள் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. அவர்கள் எல்லாம் ஒன்று கூடினால், ஹிட்லரை, ஜல்லிக் கட்டிலே சில மாடுகள், தங்களை சுற்றியுள்ளவர்களில் யாரையாவது தூக்கி எறியுமே, அது போல, தூக்கி எறிந்துவிட்டு, போனது போதும், தலையாவது பிழைக்கட்டும் என்று செய்யவும் கூடும். எந்தச் சமயத்திலே, ஜெர்மனியிலே எம் மாதிரியான அதிகாரம் நடக்கும் என்று யாரும் சொல்லவே முடியாது.

நவம்பர் பதினைந்து தேதிக்குள் சில அதிசய சம்பவங்கள் ஜெர்மனிக்குள் நடக்கப் போகிறது பாருங்கள் என்கிறார் ஒரு ராய்டடர் நிருபர். அது உண்மையோ இல்லையோ, கொப்பல்ஸ் துரை ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறாராம், '' நவம்பர் 9 அல்லது 11 தேதிக்குள் ஜெர்மனி தடுமாடி விழுந்து நொறுங்கிப் போகும் என்று நேசதேசத்தார் பிரசாரம் செய்கிறார்களாம். அப்படி ஒன்றும் ஜெர்மானியரின் மனோதிடம் குலைந்துவிடவில்லை. அந்த தேதிதான் நெருங்குகிறதே ! எங்கு பார்த்தாலும், எத்தகைய கடும் போர்கள் நடக்கின்றன தெரியுமா ? பல இடங்களில் பின்னோக்கிச் செல்லுகிறார்கள் நம்மவர்கள். ஆனாலும் ஜெர்மன் சக்தி குன்றிவிட்ட தென்றோ, ஜெர்மானியரின் மனம் இடிந்துவிட்ட தென்றோ யாரும் சொல்ல முடியாது' என்று.

'' எங்கப்பன் குதிருக்குள் இல்லை ''

'ஏங்கப்பன் குதிருக்குள்ளே இல்லே !' என்றானாம் ஒருவன். பூசுணிக்காய் திருடினவன் தோளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டானாம். இந்த கதைகள் மாதிரி தானே இருக்கிறது கொப்பல்ஸ் துரை எழுதுவதும், பேசுவதும்.

முன்பெல்லாம், ஜெர்மனியின் தாக்கும் சக்தியைப் பற்றிப் பல்லவி பாடிக் கொண்டிருந்த கொப்பல்ஸ் துரை, இப்படி அழுகைப் பல்லவி பாடும் படியாக ஆகி விட்டது. பழிக்குப் பழி வாங்க ஏற்பாடுகள் ஆகிக்கொண்டிருக்கின்றன என்கிறார் அவர். அடிவாங்கும் படலம் ஓய்ந்த பிறகல்லவா, அடி கொடுக்கப் பார்க்க வேணும் ? அந்தப் படலம் ஓயுமென்றே தோன்றவில்லையே ! நாளுக்கு நாள் மும்முரமான வீன்கள் அல்லவா நடக்கின்றன ? இதெல்லாம் ஜெர்மானியருக்கு ஏமாற்றங்கள் தானே ?

போர்ச்சுகல் ஒரு குட்டி நாடு. அதுவே துணிந்து, நேசதேசத்தாருக்கு கைகொடுக்க வந்து விட்டது. இது நாஸிகளுக்கு ஒரு ஏமாற்றம் தானே ? ஸ்வீடன் தேசம் கூட, ஜெர்மானிய்ருக்கு எத்தகைய சலுகையும் கொடுக்க மறுத்து விட்டது. ஸ்பெயின் துருக்கி ஆகிய நடுநிலைமை நாடுகளும் பராமுகமா யிருக்கத் தொடங்கி விட்டன. இத்தாலியோ காலைவாரி விட்டு விட்டது. ஏக ஏமாற்றங்கள் தான்.

இத்தனைக்கும் நடுவிலே, ஜெர்மானியருக்குக் கொஞ்சம் உத்சாகத்தைக் கொடுத்து வந்தது, ருஷ்யாவும், அமெரிக்காவும், பிரிட்டனும் கலந்து பேசும் வேலை நடவாமலே ஒத்திப் போடப்பட்டு வந்தது தான். இந்த மூன்று தேசத்தாரும் ஒன்றாகக் கூடவே மாட்டார்கள் ; அப்படியே கூடினாலும் அவர்களிடை ஒற்றுமையான முடிவுகள் ஏற்படா என்றே ஜெர்மானியர் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். நேசதேசத்தாரிடை த்வேஷ விதைகளைத் தூவத் தொடங்கினார்கள் நாஸி பிரசாரகர்கள். ஆனால் நடந்த தென்ன ?

டக் என, அமெரிக்கப் பிரதிநிதியாக கார்டல் ஹல் துரை சீமைக்கு வந்தார். அங்கிருந்து அவரும், ஈடன் துரையும், ஆனந்தமாக மாஸ்கோ போய்ச் சேர்ந்தார்கள். அங்கே மாலடோவ், ஸ்டாலின் ஆகிய எல்லாருடனும் கலந்து பேச ஆரம்பித்துவிட்டார்கள். பத்து நாட்கள் பேச்சாகு முன்பாகவே, ஒரு சுலபமான முடிவிற்கு வந்து விட்டார்கள். ஷோக்காக விருந்துகள் நடந்தன. 'ஜெர்மன் பிசாசை உருத் தெரியாமல் அடிக்கும் வரை, யுத்தத்தை நடத்துவது' என்றே அவ்விருந்துகளில் பேசினார்கள்.

இம்மாதிரி காரியங்கள் நடந்ததைக் கண்ட ஹிட்லர் கோஷ்டியார், மறுபடியும் ஏமாந்த சோணகிரிகளாகவே மாறி யிருக்கிறார்கள். ''மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், கிளம்பி, வைக்கிற பூசையிலே, ஜெர்மனியர் திணறவேண்டும். ஹிட்லர் ஒழியவேண்டும். நாஸிஸம் மடியவேண்டும். யுத்தம் சீக்கிரமே முடியும். எத்தனையோ லக்ஷக் கணக்கான வீரர்களது உயிர்கள் காப்பாற்றப்படும். கோடிக் கணக்கான குடும்பங்களில் சாந்தி குடியேறும். 'அப்பா !' என்று உலகமே பெருமூச்சு விடும். அடிமை நாடுகள் பல விடுதலை பெறும்'' என்ற விஷயங்களைப் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஒரு கை பார்த்து விட்டுத் தான் முடிக்க வேண்டும்

அமெரிக்காவிலே சமீபத்திலே ஒரு விஷயமாக பொதுஜன அபிப்பிராயத்தை அறிய வாக் கெடுத்தார்களாம். நூற்றுக்கு எழுபது பேர்கள், 'ஒரு கை பார்த்து விட்டுத் தான் முடிக்கணும்' என்று சொல்லி விட்டார்களாம். இது எதைக் குறித்திருக்கும் என்று சொல்ல வேண்டுமா ? யுத்தத்தை நீண்டகாலம் தொடர்ந்து நடத்துவதைக் குறித்துத் தான். எதிர்காலத்திலே யுத்தம் தலைகாட்டுவதற்கு இடமில்லாது அடிக்கும் வரை, இந்த யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தலாம் என்பது அவர்கள் கருத்து. நேசதேசத்தாரின் சங்கல்பமே இது தானே !

ருஷ்ய மகா நாட்டிலே பேசப்பட்ட விஷயங்கள், என்னென்ன என்பது வெளியாகிவிட்டது. (1) அச்சு நாட்டார் நிபந்தனையின்றி சரணடையும் வரை போரை நடத்துவது. (2) அவ்வப்போது ஏற்படும் நிலைமையை ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் அவ்வப்போது ஆராய்ந்து பார்த்து, அதற்கேற்ற கூட்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டி, லண்டனிலே, ஒரு ஐரோப்பிய உபதேசக் கமிஷனை ஏற்படுத்துவது. (3) யுத்தம் முடிந்த பின்னும், இந்த மூன்று வல்லரசுகளும் ஒன்றாகவே இருந்து, எதிர்காலத்தைப் பற்றி ஒற்றுமையான முடிவுகளைக் கண்டுபிடித்து, இவற்றை அமுல் படுத்துவது. (4) யுத்தத்தை நிறுத்தும் சமயத்தில், சமாதானம் பேச ஜெர்மனியிலே எந்த அரசாங்கம் இருக்கிறதோ, அந்த அரசாங்கத்திடம் ஒரு முக்கியமான வாக்குறுதியைப் பெறவேண்டும். அது என்னவென்றால், ஜெர்மானியர் இந்த யுத்தத்திலே தாங்கள் ஆக்கிரமித்த பிரதேசங்கள் பலவற்றுள் பல இடங்களில், பல அட்டூழியங்களைச் செய்திருக்கிறார்கள். கோரக் கொலைகள் புரிந்திருக்கிறார்கள். அடுக்கடுக்காக ஆடவரையும், பெண்டிரையும் நிறுத்தி வைத்து சுட்டுத் தள்ளி யிருக்கிறார்கள். அம்மாதிரி காரியங்கள் செய்தவர்களையும், செய்வதற்கு உடந்தையாக இருந்தவர்களையும், அவரவர்கள் எந்தெந்த நாடுகளில் அக்ரமம் புரிந்தார்கள் என்று தெரிகிறதோ, அந்தந்த நாடுகளிடமே ஒப்படைத்து விடவேண்டும். அந்தந்த நாடுகள், தங்கள் நாட்டுச் சட்டப்படி அவர்களை விசாரித்து, தண்டிக்கும். ஒரு நாடு என்றில்லாது, பொதுவாக அக்ரமம்

செய்தவர்களை நேசநாட்டுக் கூட்டுசபை விசாரிக்கும். (5) நாஜிகளின் ஆக்ரமிப்பிற்கு முதலில் குறியான ஆஸ்திரியாவை விடுவித்து, அதற்கு சுதந்திரத்தைப் பெற்றளிக்க வேண்டும். (6) இத்தாலியிலே, குடியரசை ஸ்தாபிக்க வேண்டும். பாஸிஸத்தை வெட்டிப் புதைக்க வேண்டும். குடியரசு வேலை செய்வ தெப்போது என்பதை மேற்கண்ட மூன்று வல்லரசுகளும் தீர்மானிக்க வேண்டும். அதற்கு ஒரு சபையை நியமிக்க வேண்டும். (7) சர்வதேச சமாதானத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு சங்கம் இருக்க வேண்டும்.

ஜெர்மனியின் முடிவைத் துரிதப் படுத்தும் முடிவுகள்

மாஸ்கோ மகா நாட்டில் ஏற்பட்ட இந்த முடிவுகள் ஜெர்மனியின் முடிவைத் துரிதப்படுத்தும் என்பது திண்ணம். நாஜிகளுக்கு இது பெரிய ஏமாற்றத்தையும் திகிலையும் மூட்டும் என்பதும் திண்ணம்.

ருஷ்யப் போரரங்கத்தி லிருந்துவரும் செய்திகள் எல்லாம் நேசதேசத்தாருக்கு உத்சாகமூட்டுபவையாகவே இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ருஷ்யர்கள், ஜெர்மன் அணிவகுப்பையும், ஜெர்மன் வரிசையையும் உடைத்துத் தள்ளிக்கொண்டு முன்னேறிய வண்ணமாகவே இருக்கிறார்கள்.

க்ரிவாய்-ராக் என்னுமிடத்திலும், நிகாபோல் எனும் ஊரருகிலும் பயங்கர யுத்தங்கள் நடக்கின்றனவாம். இந்தப் பிரதேசங்களிலே ஏராளமான இரும்பு கிடைக்கிறது. இங்குள்ள சுரங்கங்கள் ஜெர்மன்-ருஷ்ய யுத்த ஆரம்ப காலத்தில் பாழாகி விட்டன. இரண்டு வருட காலமாக, ஜெர்மானியர் கோடி கணக்கிலே இங்கே பணத்தைக் கொண்டு கொட்டி, இந்தப் பிரதேசத்தை மற்றொரு பலமான ரூர் பிரதேசமாக்கிக் கொண்டு விடலாம் என ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ருஷ்யாவிற்குக் கிடைக்கும் இரும்பிலே நூற்றுக்கு 60 பங்கு இங்கிருந்து தான் கிடைத்துக் கொண்டிருந்தது.

இதைச் சரிப்படுத்தி விட்டால், ஜெர்மனியிலிருந்து யுத்த தளவாடங்களைக் கொண்டு வர வேண்டிய சிரமம் குறையும்; ருஷ்யாவில் உள்ள ஜெர்மன் சைனியங்களுக்கு, சமீபத்திலிருந்தே சப்ளைகள் செய்து ஜமாய்த்து விடலாம் என்று நாஜிகள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அதற்கான வேலைகளும் அநேகமாகப் பூர்த்தியாகி விட்டன. ஆனால், பலனைக் கண்ணால் காணப் போகும் சமயத்திலே, இந்தப் பிரதேசத்தை நெருங்கி விட்டார்கள் ருஷ்யர்கள். 'கைக் கெட்டியது வாய்க் கெட்டாத' கதையாகப் போகிறது. இது ஒரு ஏமாற்றம் தானே?

எலிகள் போல் மடிகிறார்களாம் ஜெர்மானியர்

ஜெர்மானியர், டிநீப்பர் வளைவிலே சிக்கி, எலிகள் போல மடிகிறார்களாம். கிரிமியாவிலிருந்து வெளியே வரும் பாதையை ருஷ்யர்கள் துண்டித்து விட்டார்களாம். ஜெர்மானியர் மனமிடிந்து கண் மூக்குத் தெரியாது அலங்கோலமாக, அங்குமிங்கும் சிதறி ஓடுகிறார்களாம். கிரிமியாவில் சிக்கியவர்கள் கதி என்ன ஆகப் போகிறதோ? இன்னும் எத்தனை ஸ்டாலின்கிராடு நாடகங்கள் நடக்கப் போகின்றனவோ தெரியவில்லை.

மாஸ்கோவில் தினம் விடிந்தால், ருஷ்யர்களது வெற்றியைக் கொண்டாட பீரங்கிகள் முழங்கிக் கொண்டே யிருக்கின்றன. ஜெர்மானியர் தங்கள் ரேடியோ மூலமாகவே, ருஷ்யரது சாகசங்களைப் பிரமாதமாக எடுத்துச் சொல்லுகிறார்கள். ஒரு சில ஏரிகள் உடைந்ததாலேயே சென்னை நகரம் என்ன பாடு பட்டுப் போயிற்று! அப்படி யிருக்க, ஜெர்மன் வரிசையிலே ஏக உடைப்புக்கள் ஏற்பட்டது காரணமாக, செஞ்சேனை வெள்ளம் எவ்வளவு சேதத்தை நாஜிகளுக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டு மென்று பார்த்துக் கொள்ளுங்கள்.

ருஷ்யப் போர் முனையில் நெருக்கடி ஏற்பட்டு விட்டாப் போலிருக்கிறது. அதனால் தான், வட இத்தாலியிலிருந்து ருஷ்யாவுக்கு ஜெர்மன் படைகள் போகிறதெனத் தோற்றுகிறது. இங்கும் அங்கும் படைகளைக் கொண்டு போய்த் தவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது ஹிட்லருக்கு.

ருஷ்யர்களது முன்னேற்ற வேகத்தைக் கண்டு, பால்கன் பிரதேசங்களிலே பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது என்கிறார்கள். மாஸ்கோ மகா நாட்டிற்கு முன்பாவது, ருஷ்யர்கள் ஒரு வேளை தங்கள் பழைய எல்லையை அடைந்ததும், யுத்தத்தை நிறுத்தி விடுவார்களோ என்று சிலர் எண்ணியிருக்கக் கூடும். இனி அந்த யோசனையே அடிபட்டுப் போச்சு. ருஷ்யர்கள் கடைசி வரை விடமாட்டார்கள். ஆகவே அவர்கள் பல்கேரியாவில் திடீரென்று போய் இறங்கக் கூடும். அதே சமயம், மத்திய தரைக் கடல் புரத்திலிருந்து நேச தேசத்தார் பால்கன் பிரதேசத்திலே கால் வைக்கக் கூடும். எப்படியாவது ஜெர்மனியின் மென்னியைப் பிடிக்க வேண்டியது தானே?

பால்கன் பிரதேசத்திலே ஒரு சமஷ்டி ராஜ்யத்தை ஏற்படுத்தலா மென நாஜிகள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அப்பிரதேசத்தவர்கள் அதற்கு இணங்க வில்லைபோலிருக்கிறது. ஆகவே, இனி பால்கன் பிரதேசத்தவரது கூட்டுறவை மட்டுமே தாங்கள் எதிர் பார்ப்பதாக, நாஜிகள் சொல்லத் தொடங்கி விட்டார்கள். என்ன ஏமாற்றம்!

ருஷ்யாவிற்கு 40 லட்சம் பவுன் உதவி

ருஷ்யாவுக்கு உதவ, ஸ்ரீமதி சர்ச்சில் நாற்பது லக்ஷம் பவுன் சேர்த்து விட்டாராம். இதில் பெரும் பகுதி பிரிட்டிஷ் தொழிலாளர்களது உபயமாம். ருஷ்யாவிற்கும் பிரிட்டனுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் நேசப் பான்மையின் வலு இதிலிருந்து வெளியாகி, ஜெர்மானியரைத் துடிக்க வைக்கு மென்பது நிச்சயம். உலகத்தை எதிர்த்து உருப்பட்டவர் யாரவது உண்டா ஐயா? அவ்வாறு செய்பவரும், செய்ய நினைப்பவரும் பைத்தியங்கள் தான். அந்த முறையில் ஹிட்லரும், டோஜோவும் பைத்தியங்கள் தான். இதிலே சந்தேகம் வேறு? 'கைப் புண்ணுக்கு கண்ணாடி வேணுமா' ஐயா?

மாஸ்கோ மகாநாடு

மாஸ்கோவில் நடைபெற்ற மூவரசு மகாநாட்டின் தீர்மானங்களைக் குறித்து லண்டனிலிருந்து கீழ்க் கண்ட அறிக்கை வெளியாகியிருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் ரஷ்யா ஆகிய அரசாங்கங்களின் அந்நிய நாட்டு மந்திரிகளான மிஸ்டர் கார்டெல் ஹல், மிஸ்டர் ஆன்டனி ஈடன், தோழர் மலொடோப் ஆகியோர் மாஸ்கோ நகரத்தில், அக்டோபர் மாதம் 19-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை 12 முறை கூடிப் பேசினார்கள். இவர்களோடு கீழ்க்கண்டவர்களும் அம்மகாநாட்டில் கலந்து கொண்டார்கள்:—

அமெரிக்க ஸ்தானீகராக மாஸ்கோவிலிருக்கும் மிஸ்டர் டப்ள்யு அவெரில் ஹாரிமன், அமெரிக்கத் தரைப் படையைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஜான் எல். டீன், மிஸ்டர் க்ரீன் எச். ஹாக்ஒர்த், மிஸ்டர் ஜேம்ஸ், சி. டுன், முதலிய நிபுணர்கள் அமெரிக்காவின் சார்பாக விஜயம் செய்திருந்தார்கள். சோவியத் யூனியன் சார்பாக, மார்ஷல் கே. இ. விரோஷிலோப், தோழர்கள் எம்.ஏ.ஒய். விஷின்ஸ்கி, எம். லிட்விநோப் (அந்நிய நாட்டு டிபுடி பொது ஜன கம்மிசார்), சோவியத் படை யுத்தியோகஸ்தர்களின் தலைவரான ஏ. ஏ. க்ரைஸ்லோப், எம். வி. ஏ. செர்ஜியேப் (அந்நிய நாட்டு வியாபாரப் பொதுஜன டிபுடி கம்மிசார்) அந்நிய நாட்டுக் கமிசார் ஆபீசைச் சேர்ந்த தோழர் எம். ஜி. எப். சார்சின் ஆகியோரும் விஜயம் செய்திருந்தனர்.

இந்த மூன்று அரசாங்கங்களும் அனுப்பி யிருந்த எல்லாப் பிரச்சினைகளைக் குறித்தும் விவாதிக்கப் பட்டன. சில பிரச்சினைகள் முடிவு பெற வேண்டி யிருந்தன. அவை பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. மற்ற பிரச்சினைகளைப் பற்றி என்ன கொள்கைகளைக் கையாள வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. இவை பற்றிய நுட்பங்களைக் குறித்து முடிவு கட்டுவதற்கு, அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷன்களுக்கு இவை அனுப்பப்படும். அல்லது சாதாரணமாக நடைபெறும் அரசியல் கடிதப் போக்கு வரவு மூலமாக முடிவு கொள்ளப்படும். மற்ற பிரச்சினைகள் சம்பந்தமாகவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவதன் மூலம் பைசல் செய்யப்படும்.

பொது யுத்த முயற்சி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் அமெரிக்காவும், பிரிட்டனும், சோவியத் ரஷ்யாவும் நெருங்கி ஒத்துழைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த மூன்று அரசாங்கங்களின் அந்நிய நாட்டு மந்திரிகள் ஒன்று கூடிப் பேசியது இது தான் முதல் முறை. முதலாவதாக, ஜெர்மனி யோடும் அதன் கூட்டாளி நாடுகளோடும் நடைபெறும் போராட்டத்தை விரைவில் முடிக்க விளக்கமாக, தம்மனத்தை விட்டு விரிவாக விவாதித்தனர். அங்கு விஜயம் செய்திருந்த இராணுவ நிபுணர்களின் யோசனையையுங் கொண்டு, எந்தெந்த முறைகளில் போராட்டத்தை நடத்த வேண்டு மென்று முடிவு கட்டினார்கள். இந்த மூன்று நாடுகளின் படைகளும் நெருங்கிய கூட்டுறவோடு போராடுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

யுத்தத்தை விரைவில் முடிக்க வேண்டியது முதல் வேலை. இரண்டாவது வேலை, யுத்த காலத்தில் எப்படி நெருங்கிய தொடர் போடும் கூட்டுறவோடும் இம் மூன்று அரசாங்கங்களும் நடந்து கொள்ளுகின்றனவோ, அது போலவே யுத்தம் முடிந்துவிட்ட பிறகும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதை அங்கீகரிக்க வேண்டும். அப்போது தான், அந்த நாட்டினருக்கும், உலக சமாதானத்தைக் கோரும் பொது மக்களுக்கும் நன்மை யுண்டு. அதனால் மட்டுந் தான் சமாதானத்தைக் காப்பாற்றலாம். அம்மக்களின் அரசியல் நலமும், பொருளாதார நலமும், சமூதாய நலமும் உயர் வடையும்.

நிபந்தனைகள்

அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி வெளியிட்ட கூட்டுப் பிரகடனப்படியும், அதற்குப் பிறகு வெளியிட்ட பிரகடனங்களின் படியும், அச்சு நாடுகளுக்கு விரோதமாகப் போராட்டத்தை நடத்த வேண்டு மென்று உறுதி கொண்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும், அச்சு நாட்டோடு போராடிக் கொண்டிருக்கின்றன. அச்சு நாடுகளெல்லாம் தம் ஆயுதங்களை வைத்து விட்டு நிபந்தனை யில்லாமல் பூரண சரணாகதி யடைகிற வரையில் போராடுவ தென்று கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால், அச்சு அரசாங்கங்களின் அக்கிரமங்களி லிருந்து தங்களையும், தம் நேசர்களையும் விடுவிக்க வேண்டியது தம் கடமை யென்று நன்கு உணர்ந்திருக்கிறார்கள். விரைவில் யுத்தத்தை முடித்து, அமைதியான முறையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதையும் உணர்ந்திருக்கிறார்கள். யுத்தத்திற்குப் பிறகு, உலக மக்களையோ, பொருளாதாரத் துறைகளையோ, தள வாடங்களையோ, செலவிடக் கூடாது என்றும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மூன்று அரசாங்கங்களும் சேர்ந்து கீழ்க் கண்டவாறு பிரகடனம் செய்கின்றன:—

சமாதானத்தை நிலை நாட்டி, பாதுகாப்பான நிலைமையை உண்டாக்குவதற்கு, தத்தம் எதிரிகளோடு, இம் மூன்று அரசாங்கங்களும் ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டு மென்னும் வாக்குறுதிப்படியே தொடர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

பொது எதிரியோடு போராடுகிற எல்லோரும், எதிரியைச் சரணடையும் படி செய்வது பற்றியும், எதிரிக்குத் தளவாடங்களே யில்லாமல் செய்து விடுவது பற்றியும், எல்லா விஷயங்களிலும் ஒன்றுபட்டே வேலை செய்வார்கள்.

விதிக்கப்படும் நிபந்தனைகளை எதிரி மீறுதபடி என்ன முறைகளைக் கையாள வேண்டு மென்று அவர்கள் கருதுகிறார்களோ, அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

கூடுமான வரையில் வெகு சீக்கிரத்திலேயே சர்வதேசப் பொது ஸ்தாபன மொன்றை ஸ்தாபிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அந்த ஸ்தாபனம், சமாதானத்தை நாடும் எல்லா நாடுகளையும் விட உயர்ந்த அந்தஸ்து உடையதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நாடுகள் பெரிதா யிருந்தாலும், சிறிதா யிருந்தாலும், அந்த ஸ்தாபனத்தின் அங்கங்களாய் இருக்க வேண்டும். அப்போது தான் சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும் நிலை நிறுத்தப்படக் கூடும்.

சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் முன்னிட்டு, சட்டங்களும் அவற்றை நிறைவேற்றும் ஸ்தாபனங்களும் ஏற்படுகிற வரையில், பொதுவாகப் பாதுகாப்பு முறை ஏற்படுகிற வரை, எல்லா நாடுகளின் சார்பாகவும் என்னென்ன முறைகளைக் கையாள வேண்டு மென்று இந்த அரசாங்கங்கள் தமக்குள் கலந்து பேசிக் கொள்ளுவது மட்டுமன்றி, நேச நாடுகளைச் சேர்ந்த எல்லா நாடுகளையும் கலந்து ஆலோசிக்க வேண்டும். அப்போது தான், எல்லா நாடுகளின் சார்பாகவும் கூட்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியும்.

யுத்தம் முடிந்த பிறகு, ஒரு நாட்டார், தம் படைகளை வேறு நாடுகளில் வைத்திருக்கக் கூடாது. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள காரணங்களை முன்னிட்டு, அந் நாடுகளுடன் முன்னதாகவே கலந்து பேசிக் கொண்ட பிறகு, வைத்திருக்கலாம்.

தளவாடங்கள் சம்பந்தமாகவும், யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட வேண்டிய நிலைமை பற்றியும், நடை முறைக் கொத்த, பொதுவானதோர் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளுவது பற்றியும், இவர்கள் தமக்குள் கலந்து பேசி ஒத்துழைப்பது மட்டுமன்றி, நேச நாடுகளைச் சேர்ந்த மற்ற நாடுகளோடும் கலந்து பேசி ஒத்துழைக்க வேண்டும்.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

அக்டோபர் 28.—ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் 25-ம் தேதி வரை 12 ஜெர்மன் பட்டணங்கள் மீது பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கியதன் பயனாக 102,486 பேர்கள் கொல்லப் பட்டார்கள் என்று ஜெர்மன் உள் நாட்டுப் பாதுகாப்பு மந்திரி காரியாலயத்தார் தெரிவிக்கிறார்கள்.

லின்லித்கோ பிரபுவும் அவருடைய மனைவியாரும் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் தம்பதிகளோடு விருந்துண்டார்கள்.

அக்டோபர் 30.—கூடுமானவரை சிறந்த இளைஞர்களெல்லாம் படையில் சேரவேண்டு மென்று ஹிட்லர் இளைஞர் சங்கத்தாருக்கு, ஒரு வேண்டுகோளை ஜெர்மன் சர்வாதிகாரி விடுத் திருக்கிறார்.

அக்டோபர் 31.—'யுத்தம் உச்ச நிலையை யடைந்து கொண்டிருக்கிற' தென்று, அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் தூதர் பத்திரிகைக் காரர்களுக் களித்த பேட்டியின் போது, குறிப்பிட்டார்.

தொழிற்சாலைகளை அரசாங்க ஆதிக்கத்திற் குட்படுத்துவது பற்றி, பிரிட்டிஷ் உள் நாட்டு மந்திரி மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன் ஒரு அறிக்கை விடுத்தார்.

நவம்பர் 2.—எதிரி விமானங்கள் எறிந்த வெடிகுண்டுகளால் தேம்ஸ் முகத்துவாரத்தில் சில சொத்துக்கள் சேதமாயின.

தோல்வி மனப்பான்மை கொண்டவர்களை ஜெர்மனியில் நாள் தோறும் கொலை செய்வது அதிகப்படுவதாக ஸ்டாக்ஹாமிலுள்ள "சோஷியல் டெமோக்ராட்ஸ்" என்னும் பத்திரிகைக்கு அதன் பெர்லின் நிருபர் அறிவிக்கிறார்.

நவம்பர் 3.—"செவென்ஸ்கா டக்ப்ளாட்" என்னும் பத்திரிகையின் மால்மோ நிருபர், ஜெர்மனிக்குள் பெருங் கலவரங்கள் நிகழ்வதாகவும், பெர்லினும் 40 பட்டணங்களும் ஆபத்தான நிலைமையி லிருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

அமெரிக்காவும், அட்லான்டிக்கும்.

அக்டோபர் 28.—யுத்த நிலைமையைக் குறித்து அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்ரி எல். ஸ்டிம்சன் ஒரு அறிக்கை விடுத்தார்.

அமெரிக்க நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் கூலி விகிதம் சம்பந்தமாக, யுத்தத் தொழில் போர்டார் வகுத்த சமரச நிபந்தனைகளை அந்தத் தொழிற் சங்கத் தலைவரான ஜான் எல். லூயி நிராகரித்து விட்டார்.

சென்ற 3 வருஷங்களில் அமெரிக்கத் தளவாட உற்பத்தி 1,500 மடங்கு அதிகரித்திருப்பதாக, அமெரிக்கத் தளவாட உற்பத்தி இலாக்காத் தலைவரான பிரிகேடியர் ஜெனரல் ஹெர்மன் ஸ்டாபோர்டு கூறினார்.

அக்டோபர் 31.—அமெரிக்காவில் ஒரு லட்சம் பேர்களுக்கு அதிகமாகவே நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அவர்களை அமெரிக்கத் தலைவர் எச்சரித்திருக்கிறார்.

நவம்பர் 2.—பிரிட்டனிலும் பிற நாடுகளிலும் உள்ள அமெரிக்கர்கள் அமெரிக்கப் படைகளில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஒரு பிரகடனம் விடுத்திருக்கிறார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

அக்டோபர் 28.—தற்போது விமான உற்பத்தி மந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசியான சர் ஆர்ச்சிபால்ட் ரோலாண்ட்ஸை இந்திய வைசிராயின் இராணுவ நிர்வாக ஆலோசகர் என்னும் பதவிக்கு மேன்மை தங்கிய இந்திய வைசிராய், பிரதம மந்திரியின் அனுமதி பெற்று நியமித்திருப்பதாக, பிரதம மந்திரி காரியாலயச் செய்தி கூறுகிறது.

அக்டோபர் 29.—பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த வெல்லிங்டன் விமானங்கள் மியிங்யான் என்னும் ரயில்வே ஜங்ஷனையும், அடியா என்னு மிடத்தையும் தாக்கின. சின்மலைமீது எதிரிகள் வசமுள்ள ஒரு கிராமத்தை இந்த விமானங்கள் கீழே பாய்ந்து மிஷின் பீரங்கிகளால் சுட்டன.

அக்டோபர் 31.—அந்தமான் தீவிலுள்ள போர்ட் ப்ளேர், எதிரி வசமுள்ள பர்மிய கிராமங்களான அரகான், நியிங்யான், ஆன்பாகின் ஆகியவற்றை பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

நவம்பர் 1.—அஸ்ஸாம் பர்மா போர் முனையின் முன்னணியிலிருக்கும் இந்தியப் படைகளையும் பிரிட்டிஷ் படைகளையும் மேன்மை தங்கிய இந்திய பிரதம படைத் தலைவர் சர் க்ளாட் ஆக்கின்லெக் சமீபத்தில் பார்வையிட்டதாகச் செய்தி வெளியாகிறது.

நவம்பர் 2.—அரகான் போர் முனையில் இரண்டு முறை ஜப்பானியர்களோடு போராட நேர்ந்தபடியால், புதிதாகப் பல ரோந்துகளுக்கு ஏற்பாடாகி யிருக்கிறது.

நவம்பர் 3.—இந்திய கீழ்ப்பகுதியின் பிரதம படைத் தலைவராக லெப்டினென்ட் ஜெனரல் ஏ. ஜி. ஓ. எம். மெய்ன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ரங்கூனும், ப்ரோமும் தாக்கப்பட்டன.

ரஷ்யாவும், பின்லந்தும்.

அக்டோபர் 28.—மெலிடபோலுக்கு மேற்கே 45-வது மைலில் சோவியத் படைகள் இருக்கின்றன.

மாஸ்கோவில் நடைபெற்ற மூவரசு மகா நாட்டில் ஒரு சமரச முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மார்ஷல் ஸ்டாலினை இரண்டாவது முறையாக மிஸ்டர் ஆன்டனி ஈடன் சந்தித்துப் பேசினார்.

ஸ்ரீமதி சர்ச்சில் வசூலிக்கும் செஞ்சிலுவை ரஷ்ய உதவி நிதிக்கு 40 லட்சம் பவுனுக்குமேல் வசூலாகி விட்டது.

அக்டோபர் 29.—மாஸ்கோ மகாநாட்டில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டதென்றும், கையெழுத்தாக வேண்டியது தான் பாக்கி யிருக்கிறதென்றும் மிஸ்டர் ரூஸ்வெல்ட் அறிவித்தார்.

அக்டோபர் 30.—மாஸ்கோ மகாநாட்டின் ஒப்பந்தத்தை எழுதுவதில் நிபுணர்கள் நாளொன்றிற்கு 18 மணி நேரம் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அக்டோபர் 31.—கிரிமியாவிற்கு முன்புள்ள முக்கியமான இடமான ஜெனிசெஸ்க் தீக்கிரையானது, கிரிமியாவிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு அருகில் செம்படைகள் நெருங்கி விட்டன.

நவம்பர் 1.—க்ரிமியாவிலிருந்து மேற்குத் திசைப்புறம் வெளியேறுவதற்குக் கடைசிப் பாதையாக யிருக்கும் பெரிகோப்பை செம்படைகள் கைப்பற்றிவிட்டன. கிரிமியாவிலிருந்து ஜெர்மானியர்கள் தப்பியோட முடியாதபடி பாதையை செம்படைகள் வெட்டிவிட்டன.

தோற்றுவிட்ட ஜெர்மன் படைகள் சிதறிப்போய் தப்பி யோடுகிறார்கள். இத்தாலியிலிருந்து ரஷ்யாவிற்கு நாஜிப் படைகள் வெகு வேகமாக வந்து கொண்டிருக்கின்றன.

மாஸ்கோ மூவரசு மகாநாடு பற்றி ஒரு அறிக்கை வெளியாகி யிருக்கிறது.

நவம்பர் 2.—கார்க்கோவா கைப்பற்றப்பட்டது. கெர்சானை நோக்கி பலமான இரண்டு ரஷ்யப் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஜெனரல் பான் மான்ஸ்டீனுடைய ஜெர்மன் படைகளில் மிகுந்திருப்பவற்றை துண்டிப்பது தான், இவற்றின் நோக்கம்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதிகள்.

அக்டோபர் 28.—டொரொல்லா, காஸ்டல் மன்ரோ, மான்டிமிட்ரோ, மான்டிபல்கோன், மபெல்டா என்னுமிடங்களை நேசப்படைகள் கைப்பற்றின.

அக்டோபர் மாதம் 1-ம் தேதி, பொருளாதாரக் கட்டு திட்டங்களும் நிதிசம்பந்தமான கட்டு திட்டங்களும் கொண்டதோர் ஒப்பந்தத்தில் படோக்ளியோ அரசாங்கமும் நேசநாட்டு அரசாங்கங்களும் கையொப்பமிட்டதாக வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது.

அக்டோபர் 29.—தென் இத்தாலியில் இப்போதுள்ள ஜெர்மன் படைத்தலைவரான ஜெனரல் கேசல்ரிங்குக்குப் பதிலாக, ஜெனரல் பான் விட்டிங்காப் நியமிக்கப்பட்டிருப்பதாக விஷி வானொலி நிலையத்திலிருந்து அறிவிக்கப்படுகிறது.

மோலிஸ் கைப்பற்றப்பட்டது. டியோன் ரோட் சந்திப்பு மிகவும் ஆபத்தான நிலைமையி லிருக்கிறது.

அக்டோபர் 30.—பீட்ராவைரானோ, மான்டியாகோன் என்னுமிடங்கள் கைப்பற்றப்பட்டன.

அக்டோபர் 31.—ரொக்காவிவியாவி லிருந்து ஜெர்மானியர்கள் விரட்டப்பட்டனர். நோசெலெட்டோ, எய்லானோ என்னுமிடங்கள் கைப்பற்றப் பட்டன.

நவம்பர் 1.—ப்ரொசொலோன், மாச்சியா, கோடினா ஆகிய இடங்கள் கைப்பற்றப்பட்டன. டிரேனியன் கடலுக்கும் வால்டர்னோவுக்கும் இடையில் மகா கடுமையான போராட்டம் நடைபெற்றது. 5-ம் படையும் 8-ம் படையும் முக்கியமான கட்டங்களில் முன்னேற்ற மடைந்தன.

நவம்பர் 2.—5-ம் படை கசனோவாவைக் கைப்பற்றி விட்டது. இசெர்னியாவிற்குப் போகும் மலைப் பாதையையும் கைப்பற்றி விட்டது. வெனெபோவை பீரங்கிகளைக் கொண்டு தாக்கக் கூடிய தூரத்தில், நேச நாட்டுப் படைகள் இருக்கின்றன.

அரசர் ஆதிக்கத்திலிருக்கும் மட்டும், தான் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை அமைக்க முடியாதென்று, மார்ஷல் படோக்ளியோ இத்தாலிய மன்னரிடம் கூறிவிட்டதாகத் தெரிகிறது.

நவம்பர் 3.—5-ம் படை மாசிகோ மலையைக் கைப்பற்றிக் கொண்டது; கெய்டா வளைகுடாவின் கரையைத் தாக்கியது. கரோலினாவையும் சான் க்ரோஸ் மலையையும் நேசப் படைகள் கைப்பற்றின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி கைப்பற்றிய நாடுகள்.

அக்டோபர் 31.—வட பிரான்சு மீது பிரிட்டிஷ் விமானங்கள் பறந்து வந்து இரண்டு ஜெர்மன் விமானங்களை நாசமாக்கின. லாசியிலுள்ள விமான நிலையத்தையும் தாக்கின.

நவம்பர் 2.—பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் பாரிஸ் நகரத்திற்கு மேலே பறந்து இரண்டு ஜெர்மன் விமானங்களையும் பல ரயில் வண்டித் தொடர்களையும் நாசஞ் செய்தன.

கீழக் கோடி நாடுகள்.

அக்டோபர் 28.—மோனோ, ஸ்டெர்லிங் என்ற தீவுகளில் நேச நாட்டுப் படைகள் போய் இறங்கிவிட்டன.

அக்டோபர் 29.—கான்டன், ஹாங்காங், ஸ்வாடோ, அமாய் முதலிய இடங்களிலுள்ள ஜப்பானிய வியாபாரிகளும் மற்ற ஜப்பானியர்களும் அங்கிருந்து காலி செய்துவிட ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சீனாவின் கிழக்குப் பகுதியில் ஜப்பானியர்களின் நிலைமை தளர்ந்து கொண்டு வருவதாக ஒரு சீன இராணுவ அதிகாரி குறிப்பிடுகிறார்.

பசிபிக் சமுத்திரத்தில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் 10 ஜப்பானிய வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்து விட்டதாகவும் 4 வியாபாரக் கப்பல்களை சேதப்படுத்தி விட்டதாகவும் அமெரிக்கக் கப்பற் படை மந்திரியான கர்னல் எப். நாக்ஸ் குறிப்பிடுகிறார்.

அக்டோபர் 30.—சாலமன் தீவுகளைச் சேர்ந்த சாய்சேல் தீவில் நேச நாடுகளின் 'பாரச்சூட்' படைகள் வந்திறங்கின.

அக்டோபர் 31.—மேல சேகியாங்கிலும் ஹூபேயிலும், சால்வீன் ஆற்றிற்கு மேல் கரையில் தொடர்ச்சியாக நடைபெறும் போராட்டத்தில் ஜப்பானியர்கள் பெருஞ் சேதமடைந்தனர்.

ஷியாங்-கெய்-ஷேக் 56-வது ஆண்டு நிறைவு பற்றி அவரை வாழ்த்தி ரூஸ்வெல்டும், ஸ்டிம்ஸனும் அவருக்குச் செய்திக ளனுப்பினார்கள்.

நியூ கினியைச் சேர்ந்த கவீங், வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது.

சாய்செல்லுக்கு அப்பால் 11 ஜப்பானிய விமானங்கள் நாசஞ் செய்யப்பட்டன.

ரபாலில் 45 ஜப்பானிய விமானங்கள் நாசஞ் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நவம்பர் 2.—சாலமன் தீவுகளில் கடைசி ஜப்பானியக் கோட்டையான போகென்வில்லா தீவை அமெரிக்கப் படைகள் தாக்கின. மேல் கரையிலுள்ள எம்பெரெஸ் அகஸ்டா விரிகுடாவை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

நடு நிலைமை நாடுகள்.

நவம்பர் 1.—"நாடுகளுக்கு விடுதலையையும் சுயேச்சையையும் அடிப்படையாகக் கொண்ட நாகரிகத்தை உறுதிப் படுத்த வேண்டுமென்பது தான் நம் லட்சியம்" என்று துருக்கி பார்லிமெண்டில் அதன் தலைவர் இஸ்மெத் இனோனு அறிவித்தார்.

நவம்பர் 2.—அங்காராவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகரான சர் நாச்புல் ஹியுகிசனும், துருக்கி அந்நிய நாட்டு மந்திரியான மெனிமிஞ்சியோக்லூவும், மிஸ்டர் ஈடனுடன் விவாதிக்கும் பொருட்டு, கெய்ரோவுக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

ரூ. 5,000 ரூ. 1,000

பரிசுகள்

எதிரி உளவாளிகள் யார் ?

எதிரிக்கு உதவி செய்கிறவர்கள் யார் ?

பிடித்துக் கொடுத்தால் ரூ. 5,000 வரை பரிசு

அவர்களைக் கைது செய்யத் தக்க தகவல் கொடுப்பவர்களுக்கு

ரூ. 1,000 வரை பரிசளிக்கப்படும்

- 1. சந்தேகத்திற் கிடமான கப்பல் நடமாட்டங்கள்; குறிப்பாக, கடலோரங்களில் நடமாட்டங்கள்,
- 2. அந்நியர்கள் இராணுவ உடுப்புக்களுடனும் ஆயுதங்களுடனும், அல்லது அவையின்றியும், கூட்டமாகவோ, தனித் தனியாகவோ காணப்பட்டால்,
- 3. நேச நாட்டு விமானங்கள் அல்லாதவை தரையிலோ ஆகாயத்திலோ காணப்பட்டால்,
- 4. அவற்றிலிருந்து விமானக் குடைகளின் உதவியால் யாராவது இறங்கினாலும், எதையாவது இறக்கினாலும்,
- 5. தரையிலோ, கடலிலோ, ஆகாயத்திலோ எதிரி நடமாட்டம் பற்றிய குறிப்புக்கள் ஆகிய தகவல்களைக் கொண்டு எதிரிகளின் உளவாளிகள் கைது செய்யப்பட்டால்,

இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும்

உளவாளிகள் கிடைத்தாலும் அல்லது தகவல் கிடைத்தாலும் கிராமப் பெரியதனக்காரருக்காவது போலிசாருக்காவது கூடிய சீக்கிரம் தெரிவிக்க வேண்டும்; அல்லது கைது செய்யப் பட்டால், அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்.

பரிசுத் தொகை பெற விரும்புவோர் அது சம்பந்தமான முழு விவரங்களும், சாட்சிகளின் பெயர்கள், விலாசங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றுடன் ஜில்லா கலெக்டருக்காவது ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்காவது அனுப்ப வேண்டும்.

இந்தப் பரிசுகள் சாதாரணமாக படை உத்தியோகஸ்தர்களுக்கும், சிவில் இலாக்காக்களிலுள்ள கெஜடெட் உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்பட மாட்டா. ஆனால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்தியா அரசாங்கத்தின் அனுமதி பெற்று அவர்களுக்கும் வழங்கப்படும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.